# இந்து ஒளி

# HINDU OLI



அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

*Quarterly of*
*All Ceylon Hindu Congress*

தீபம் - 5


## மகா சிவராத்திரி சிறப்பிதழ்

சுடர் - 2



மறைந்த மாமன்றத் தலைவர்
திரு. வே. பாலசுப்பிரமணியம்
நினைவுப் பேருரை
வைபவ நிகழ்வுகள்







உ

சிவமயம்

*பஞ்ச புராணங்கள்*

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித்தி ரிந்தவர் காண்கிலார்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

## திருவாசகம்

நீண்ட மாலு மயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
யாண்டு கொண்ட வென்னா ரமுதை
யள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னையாண்டு கொண்டென்னுள்
இருட்பிழம்பற வெறிந்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகாவம் பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பங்கயன் முகுந்தனாம் பரமென் றுன்னியே
தங்களிருவருஞ் சமர் செய் துற்றுழி
அங்கவர் வெருவர அங்கியாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.

*திருச்சிற்றம்பலம்.*

உ
சிவமயம்
# இந்து ஒளி
*தீபம் - 5* *சுடர் - 2*
விக்கிரம வருடம் மாசித் திங்கள் 9ம் நாள்
21. 02. 2001

## சிவ விரதமனுட்டித்துத் துன்பம் நீங்கி இன்பம் பெறுவோம்

நாம் எமது வாழ்வில் பல விதமான சிறப்பான புண்ணிய விரதங்களை அனுட்டிக்கின்றோம். இத்தகைய விரதங்களில் சிவராத்திரியும் ஒன்று.

'சிவராத்திரி' என்ற பதத்தில் "சிவ" என்பதற்குத் துன்பத்தை அழிக்கிறது என்றும் "ராத்திரி" என்பதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது என்றும் ஆன்றோர் பொருள் கூறுவர். ஆகவே, சிவராத்திரி விரதத்தை முறைப்படி அனுட்டித்தால் துன்பங்கள் நீங்கி இன்பம் பெறலாம் என்பது பொருள்.

சிவராத்திரி இரவு பதின்னான்கு நாழிகைக்கு மேல் மூன்றே முக்கால் நாழிகை சிவதரிசனத்திற்கு மிகவும் உயர்ந்த காலமாகும் என்றும் அப்படிச் செய்தால் இறையருள் கிட்டுவது உறுதி என்றும் ஆன்றோர் கூறுவர்.

சிவராத்திரி விரதமிருந்து பேறு பெற்றோர் வரலாறுகள் பல உள. இவ்விரதத்தால் உடல் தூய்மை, உள்ளத்தூய்மை, ஐம்புலன், ஐம்பொறியடக்கம், ஆண்டவனிடம் ஒன்றிய பேரன்பு முதலிய கிடைத்தற்கரிய பேறுகள் கிடைப்பதோடு, எல்லாவற்றிற்கும் மேலாக எமது துன்பங்கள் யாவும் நீங்கப் பெற்று இம்மையில் இன்புற்று வாழ்ந்து மறுமையில் பேரின்பப் பெருவாழ்வு பெறுவது உறுதியென ஆன்றோர் கூறுவர்.

எனவே, பல வழிகளிலும் இன்னல்பட்டுச் சொல்லெணாத் துயரங்களில் ஆழ்ந்திருக்கும் எம்மவர் அனைவரும் துன்பங்கள் நீங்கி இன்புற்று வாழ வழியமைத்துத் தருமாறு இவ்விரத மனுட்டிப்பதன் மூலம் இறைவனை வேண்டி துன்பங்கள் நீங்கி இன்பம் பெறுவோமாக.

# மகா சிவராத்திரி விரத மகிமை

- குமாரசாமி சோமசுந்தரம்

சிவராத்திரி ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற அபரபக்க சதுர்த்தசி திதியன்று இடம் பெறுகின்றது. எல்லா மாதச் சிவராத்திரிகளும் சிவனுக்குரிய விரதத்தை அனுட்டிக்க வேண்டிய புனிதமும் புண்ணியமும் நிறைந்த தினங்களேயாகும். எனினும் மாசி மாதத்தில் வருகின்ற சிவராத்திரியை "மகா சிவராத்திரி" என்பர். மகா சிவராத்திரி சைவர்களுக்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில் அன்று நடுநிசியில் தான் "இலிங்கோற்பவம்" நிகழ்ந்தது.

இந்த "இலிங்கோற்பவம்" ஆகும் நடு இரவில் சதுர்த்தசி திதி இருக்க வேண்டும். சதுர்த்தசி திதி அவ்வாறு அமைகின்ற இரவுடன் கூடிய தினமே மகா சிவராத்திரி தினமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் நிறுத்துதல் அவசியம். அடுத்த நாள் அமாவாசையாகும். சதுர்த்தசிக்கு முதல் நாள் திரயோதசித் திதி அமையும். சிவராத்திரித் தினம் திரயோதசியுடன் பொருந்தியிருப்பது உத்தமம் ; அமாவாசையுடன் சம்பந்தப்படுதல் அதமம் என நூல்கள் கூறுகின்றன. சிவராத்திரியை நிர்ணயிப்பவர்கள் இவற்றைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மாசி மாதத்து மகா சிவராத்திரி நடு இரவு, இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட காலம் ஆகும். இது பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

பிரமாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய வரலாற்றை அறிவதன் மூலம், "இலிங்கோற்பவம்" என்கின்ற எண்ணக் கருவைத் தெளிந்து கொள்ள முடியும்.

சரஸ்வதி கல்விக்குரிய தெய்வம். இலக்குமி செல்வத்திற்குரிய தெய்வம். சரஸ்வதியின் நாயகன் பிரமா. அவர் படைப்புக்களுக்குப் பொறுப்பானவர். இலக்குமியின் நாயகன் விஷ்ணு. அவர் படைக்கப்பட்டவற்றைக் காத்து அருளும் பொறுப்பை ஏற்றுள்ளவர். இருவரும் முக்கியமான தொழில்களுக்கு அதிபதிகள் என்ற வகையில், இந்த உலக ஆட்சியில் மிக முக்கியமானவர்கள்தான். எனினும், அவர்கள் அறிந்து கொள்ளாததொன்று என்னவெனில், அவர்களில் ஒருவரின் தொழிலை மற்றையவர் ஆற்ற முடியாதுள்ளார் என்னும் உண்மையையாகும்.

ஒருவரிடம் ஏற்படுகின்ற அகந்தை, செருக்கு என்பன அவர் உண்மையை அறியவிடாமல் தடைசெய்யும் வல்லமை படைத்தன. இவ்வுலகின் உயிருள்ளவற்றையும் உயிரற்றவற்றையும் தாமே படைப்பவர் என்ற காரணத்தால் பிரமாவிடம் அகந்தை குடிகொண்டது. போதாததற்குக் கல்விக்கு அதிபதியான சரஸ்வதியைத் தம் நாவில் வைத்து, அவளின் நாயகனாக விளங்குவதால் பிரமாவுக்குக் கல்விச் செருக்கும் உண்டாகியது.

மறுபுறத்தில், படைக்கப்பட்டவை யாவற்றையும் அழியாமல், பேணி, போஷித்து காத்துவருபவர்தானே என்பதால் விஷ்ணுவும் அகந்தை கொண்டார். அத்துடன் செல்வத்துக்கு அதிபதியான இலக்குமியின் நாயகன் தானே என்பதால் செல்வச் செருக்கும் விஷ்ணுவுக்கு ஏற்பட்டது.

அகந்தை, செருக்கு, கர்வம் என்பவற்றின் உச்சத்தில் நின்ற பிரமாவும் விஷ்ணுவும் தங்களில் யார் பெரியவர் என வாதிட்டார்கள்.

இந்த உலகத்தின் விநோதங்களையும் நூதனங்களையும் அவற்றைப் படைத்த பிரமா கண்டு பெருமகிழ்ச்சியடைந்து தன்னைத்தானே பாராட்டிக் கொண்டார். அதனால் பெருமிதங்கொண்ட பிரமா, தன்னைத் தவிர வேறு யாரால் இத்தகைய வியத்தகு உலகத்தைச் சிருஷ்டிக்க முடியும் என ஆர்ப்பரித்து, இந்த உலகத்திற்குக் கர்த்தா வேறு யாருமில்லை, தான் ஒருவனே என்று பிரகடனம் செய்தார்.

இதைக் கண்ணுற்ற விஷ்ணு, பிரமாவின் அகங் காரத்திற்கு விட்டுக் கொடுக்காமல், "உன்னால் படைக்கப்பட்ட இந்த உலகமும், உலகப் பொருள்களும் நான் இல்லையென்றால் அக்கணமே அழிந்து போயிருக்கும். அவை அழியாமல் நிலைக்கச் செய்து காத்து வருபவன் நான். என்னாலன்றோ இந்த உலகம் அழகும் பொலிவும் பெற்றுத் தொடர்ந்து வாழ்கிறது. அதனால், காத்தல் கடவுளாகிய நானே இந்த உலகத்துக்குக் கர்த்தர்" என்று எதிர்ப் பிரகடனம் செய்தார்.

பிரமாவும் விஷ்ணுவும் இவ்வுலகத்திற்குக் கருத்தா தான், தான் என்று சொற்போர் செய்தார்கள். முடிவில்லாத வாதமாக நெடுங்காலம் சென்றது. இரண்டு கர்த்தாக்கள் இருக்க முடியாதல்லவா? அதனால், இருவரில் எவர் கர்த்தா என்பதைத் தீர்மானிப்பதற்கு யுத்தம் தொடங்கினார்கள். மகாயுத்தமாக மாறிற்று. பிரமாவும் விஷ்ணுவும் தத்தம் அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் ஒருவருக் கொருவர் பிரயோகித்தனர். யுத்தம் பல காலங்கள் தொடர்ந்தது முடிவில்லாத யுத்தத்தினால் உலகத்திலும் ஏனைய அண்டங்களிலும் பாரிய அழிவுகளும் அநர்த்தங்களும் ஏற்பட்டன. மனிதர்களும், தேவர்களும், ஏனைய உயிர்களும் அஞ்சி நடுநடுங்கின. கோரயுத்தத்தைக் கண்டு யார்தான் அஞ்சமாட்டார்கள். உலகமே, ஊழிக்காலமோ என ஆடி, நிலைதடுமாறியது. எனினும் போர் நின்றபாடில்லை.

உலகத்து உயிர்கள் அனைத்தும் இவ்வாறு கலங்கி நின்ற வேளையில், நாரதமகா முனிவர் யுத்த முனையில் தோன்றினார். கோபாவேசங்கொண்டு நிற்கும் பிரமாவையும் விஷ்ணுவையும் நோக்கி, "யுத்தத்தை நிறுத்துங்கள். யுத்தத்தினால் உலகில்

ஏற்பட்டுள்ள அழிவுகள், அனர்த்தங்களைப் பற்றிச் சிந்திக்காத நீங்கள் இவ்வுலகின் கர்த்தாவாக இருக்க என்ன தகுதி இருக்கிறது" என்று கேட்டார். நாரதமுனிவரின் வார்த்தைகளுக்கு அவர்கள் செவிசாய்க்க வில்லை. யுத்தம் தொடர்ந்து நடைபெற்றது. நாரதரும் விடவில்லை. "இந்த உலகத்திற்கு ஒருவரே கருத்தா. அவர்தான் பரம்பொருள் ஆகிய சிவபெருமான். உங்களைப் படைத்தல், காத்தல் தொழில்களைச் செய்யும்படி பணித்தவரும் அவரே. அவ்வாறு இருக்க உங்களுக்குப் பதவிகளைத் தந்த முழுமுதற் கடவுளை மறந்து, உங்களுக்குள் யார் பெரியவன் என்று சண்டை போடுகிறீர்களே. உங்கள் அகந்தையும் செருக்கும் அறிவை மறைத்து விட்டனவே." என்று நாரத மகாமுனிவர் பலவாறாக எடுத்துக் கூறியவற்றைப் பிரமாவும் விஷ்ணுவும் ஒப்புக் கொள்ளவில்லை. தங்களுடைய பதவிகள் வேறொருவரால் தரப்பட்டவை என்று நாரதர் கூறியதை எதிர்த்து அவரை நிந்தனை செய்தார்கள். யுத்தமே தங்களுள் யார் பெரியவன் என்பதைத் தீர்மானிக்கும் என்று கூறி நாரதரை அங்கிருந்து வெளியேறச் சொல்லிவிட்டார்கள். அப்பொழுது நாரதர் சிரித்தார். "உங்களுக்கு இந்தப் பதவிகளைச் சிவபெருமானே தந்தமைபற்றி எனக்கு நீங்கள் பல தடவைகள் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. பதவியில் அமர்த்தப்பட்டவரை விட, அப்பதவியை வழங்கியவர் பெரியவர்தானே. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு நாரதர் அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

யுத்தம் என்பது போதைதானே. போதைக்கு அடிமைப்பட்டவர்கள், அப்போதைக்கு இரையாவதைத் தவிர மீட்சி எய்துவது மிகவும் கடினம். பிரம, விஷ்ணுக்கள்கூட விதிவிலக்கல்ல.

இப்பொழுது யுத்தம் முன்னரைவிட உக்கிரமாகியது. அப்பொழுது பிரம, விஷ்ணுக்கள் முன்பாக இருவருக்கும் மத்தியில் ஒரு பெருஞ் சோதிப் பிழம்பு தோன்றியது. அது ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியாக விண்ணையும் மண்ணையும் அளாவி நின்றது. உக்கிரமாக யுத்தம் புரிந்த பிரம, விஷ்ணுக்கள் அதைக் கண்டு அசந்து போனார்கள்.

அப்பொழுது அங்கு நாரத மகா முனிவர் வந்தார். பிரம, விஷ்ணுக்களை நோக்கி, "இச்சோதியின் அடியையும் முடியையும் தேடிக் கண்டு பிடியுங்கள். உலகத்திற்குக் கருத்தா யாவர் என்ற வினாவிற்கு விடை கிடைக்கும்" என்றார். அவர்கள் இருவரும் போரை நிறுத்திவிட்டு, அச் சோதிப் பிழம்பின் அடியையும் முடியையுங் கண்டு தத்தம் பெருமையை நிலைநிறுத்துவதற்குப் புறப்பட்டனர்.

விஷ்ணு பன்றி வடிவத்தை எடுத்து, அடியைத் தேடும் பொருட்டுப் பூமியைப் பிளந்து கீழ் நோக்கிச் சென்றார். பிரமா, அன்னப் பறவை வடிவெடுத்து முடியைத் தேடி மேலே பறந்து சென்றார்.

பல காலங்கள் கழிந்தன. இருவரும் அடியையும் முடியையும் தேடித்தேடிக் களைத்தே விட்டார்கள். அவர்கள் முயற்சிகள் பலிக்கவில்லை. அயர்ந்து சோர்ந்த நிலையில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். வேதங்களும் வேத சாஸ்திரங்களும், பிரமாவினால் படைக்கப்பட்டு,விஷ்ணுவால் காக்கப்பட்டு வருபவை. அவைகளே, எள்ளிநகையாடி, பிரமாவையும் விஷ்ணுவையும் விளித்து, உலகத்திற்குக் கருத்தா யாவர் என்று கேட்டன. பிரம, விஷ்ணுக்கள் ஆற்றாமையினால் வெட்கித் தலை குனிந்தனர். அவர்களின் அகந்தை, கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு என்பன ஒழிந்த நிலையில், அறிவு கைகூடவே, உலகத்துக்குக் கருத்தா சிவபெருமானே என்பதை ஒப்புக் கொண்டார்கள். முழுமுதல் கடவுள் சிவபெருமான் ஒருவரே என்றும், சிவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் எவரும் இல்லை என்றும் உணரப்பெற்றவராய் பிரமாவும் விஷ்ணுவும் தம் அறியாமையையும் தாம் அகந்தை கொண்டமையையும் மன்னித்து அருளும்படி சிவபெருமானை மெய்யன்போடு பிரார்த்தித்தார்கள். அவ்வாறு அவர்கள் பிரார்த்திக்க, இலிங்கோற்பவ மூர்த்தி வெளிப்பட்ட தினமே மகா சிவராத்திரி தினமாகும்.

ஆதியும் அந்தமும் இல்லாமல் ஓங்கி வளர்ந்திருந்த சோதிப் பிழம்பு, சுருங்கி அருணாசல மலையாயிற்று. திருவண்ணாமலை என இது அழைக்கப்படுகிறது. அம்மலை சிவலிங்க வடிவாய் விளங்குகிறது. பிரம, விஷ்ணுக்கள் அரனைப் பணிந்து கேட்டுக் கொண்டபடி, சிவராத்திரி தினம் புண்ணிய விரத தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

சிவபெருமான் அருவுருவத் திருமேனியுடன் திருக்கோயில்களில் வீற்றிருக்கின்ற மூர்த்தமே சிவலிங்கப் பெருமான் ஆகும்.

*"செங்க ணானும் பிரமனுந் தம்முளே*
*எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்*
*இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்*
*பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே".*

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

*"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்*
*நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"*

எனச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

விசும்பும் நிலமும் அளாவிய அக்கினிச் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய வடிவம் சிவலிங்கம். சிவலிங்க வழிபாடு மிகத் தொன்மையான காலத்திலிருந்து நடைபெற்று வருகிறது. சிந்துவெளி நாகரிக காலத்தில் சிவலிங்க வழிபாடு இருந்தமைக்கு அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கிடைத்துள்ளன. இதிகாச காலத்தில் ஸ்ரீ இராமபிரான் இராமேஸ்வரத்தில் சிவலிங்க வழிபாடு செய்தமை பற்றி இராமாயணம் கூறுகிறது. இராவணேஸ்வரன் மிகுந்த சிவபக்தி கொண்டவன். அவனின் சிவ பக்தியை நாயன்மார்கள் நால்வரும் நயந்து பாடியுள்ளார்கள். இலங்கையில் மட்டுமல்ல அகிலம் முழுவதிலும் சிவலிங்க வழிபாட்டினைப் பரப்பியவர் இராவணேஸ்வரர். இலங்கைக்குச் சிவபூமி என்னும் சிறப்புப் பெயர் உண்டாவதற்கு இராவணேஸ்வரனே காரணம்.

சிவலிங்கத்தை வழிபட்டால் மற்றெல்லாத் தெய்வங்களையும் வழிபட்டதாக அமையும் என வேத உபநிடதங்கள் கூறுகின்றன.

சிவனுக்கு அறுபத்து நான்கு வடிவங்கள் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்பது வடிவங்களே பொதுவாகத் திருக்கோயில்களில் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றன. இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர். பைரவர், வீரபத்திரர். நடராஜ மூர்த்தி, தட்சணா மூர்த்தி, பிட்சாடண மூர்த்தி என்பன அந்த ஒன்பது வடிவங்களும் ஆகும்.

இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த சிவாலயங்கள் ஆக நகுலேச்சரம் வடக்கிலும்; திருக்கேதீச்சரம், முன்னேச்சரம் ஆகிய இரண்டும் மேற்கிலும், திருக்கோணேச்சரம் கிழக்கிலும்; தான்தோன்றியீச்சரம் வடமத்தியிலும்; தென்கோடியிலே தெய்வந்துறையில் சந்திரசேகரம் என்னும் சிவஸ்தலமும் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் திருக்கேதீச்சரம் சம்பந்தர், சுந்தரராலும், திருக்கோணேச்சரம் சம்பந்தராலும் தேவாரம் பாடப்பெற்ற பெருமைவாய்ந்த சிவஸ்தலங்கள். திருக்கேதீச்சரத்தைக் கேது வழிபட்டு உய்வு பெற்றது. இத்தலத்தின் வரலாற்றினை "தட்சிண கைலாய மான்மியம்" கூறுகிறது. மாசி மாதத்து மகா சிவராத்திரி என்றதும் எமக்கெல்லாம் நினைவிற்கு வருவது திருக்கேதீச்சர ஆலயமே என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

தட்சிண கைலாயமாக விளங்குவது திருக் கோணேச்சரம். முன்னேச்சரம் பிரமதேவரால் பூலோகத்திலுள்ள சிவகோடிகள் உய்வுபெறும் பொருட்டு பரார்த்தமாகப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்டது. ஆதலால், முன்னேச்சரம், காசி விஸ்வநாதர் ஆலயத்திற்குச் சமமான தல விசேடம் பெற்றுத் திகழ்வதாகத் தட்சிண கைலாய புராணம் கூறுகிறது. கீரிமலையிலே அமைந்துள்ள நகுலேச்சரம் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புடையது. நகுலமுனிவரின் பிதிர்ச் சாபம் இங்குள்ள புனித தீர்த்தத்தில் மூழ்கியெழ நீங்கப்பெற்று, அம்முனிவரின் கீரிமுகம், மனித முகமாக மாறியமை குறித்துப் புராணங்கள் கூறுகின்றன. தான்தோன்றியீச்சுரர் ஆலயங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டிசுட்டானிலும் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையிலும் உள்ளன. சுயம்புலிங்கமாய்த் தோன்றிய திருத்தலங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பல சிவஸ்தலங்கள் உள்ளன. இச் சிவஸ்தலங்களில் மகா சிவராத்திரி வெகுசிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் ஆலயத்திலும் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

நல்ல எண்ணங்களை விதைத்தால் நற்செயல்களை
அறுவடை செய்வீர்கள்.
தீய எண்ணங்களை விதைத்தால் தீய செயல்களை
அறுவடை செய்வீர்கள்.
நல்லதோ, தீயதோ வெளிவரும் பயன்
நீங்கள் உள்ளே இடுகின்ற எண்ணங்களை
பொறுத்தே அமைகிறது!
- பகவான் பாபா

ஒருமுறை அமிர்தம் எடுப்பதற்காகத் திருபாற் கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தார்கள். அப்பொழுது அங்கிருந்து ஆலகாலம் என்னும் கொடிய விஷம் வெளிப்பட்டது. யாவரையும் அழிக்கும் தன்மைவாய்ந்த விஷம் தேவர்களைக் கலைக்க, அவர்கள் ஓடோடிச் சென்று சிவனைச் சரணடைந்தார்கள். நமசிவாய, நமசிவாய என்று பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிக்கொண்டு சிவனைப் பணிந்து வணங்கினர். கருணாமூர்த்தியான சிவபெருமான் தேவர்களையும் ஏனைய சீவராசிகளையும் காக்கத் திருவுளங்கொண்டு, அந்த ஆலகால விஷத்தை எடுத்து தாமே தம் வாயினுட் போட்ட வேளை, அருகில் இருந்த பார்வதி தேவியார், அந்த விஷம் சிவனின் வயிற்றிற்குள் செல்லவிடாது தடுப்பதற்காக சிவனின் தொண்டையிலுள்ள அன்னக் குழாயை அழுத்திப் பிடித்தார். அப்போது விஷம் சிவபெருமானின் கழுத்திலேயே தங்கிவிட்டது. அவர் நீல கண்டர் ஆனார்.

இந்த ஆலகால விஷம் எவரையும் பாதிக்காமல் இருப்பதற்காகத், தேவர்கள் எல்லோரும் அன்றைய தினம்

விதி என்பது என்ன? நாம் விதைப்பதை நாம் அறுவடை செய்கிறோம். நம் விதியைப் படைப்பவர்கள் நாமே. எனவே, பழியோ பாராட்டோ வேறு எவரையும் சாராது.

(சுவாமி விவேகானந்தர்)


சிவபெருமானை நோக்கி உபவாசம் இருந்து, இரவு முழுவதும் கண் விழித்து, உறங்காமல் எல்லாம் வல்ல எம்பெருமானைத் தியானித்தபடி இருந்தார்கள். இந்தப் புனித நாளைத்தான் மகா சிவராத்திரி என்று அனுட்டிக்கப்படுகிறது என மற்றொரு வரலாறு உண்டு.

உலக மக்களுக்கு வருகின்ற துன்பங்கள், துயர்களைத் தாம் ஏற்று, அவர்களைக் காத்து அருளுகின்ற கருணைத்திறன் வாய்ந்தவர் இறைவன். அதனால் அவர் பசுபதி ஆனார். பிறர் துன்பங்களைக் கண்டு இரங்கி, அவற்றைப் போக்க நாமும் முயலவேண்டும் என்பதனை இறைவன் இவ்வாறு நமக்கு உணர்த்தியுள்ளார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மகா சிவராத்திரி விரதம் மிகவும் மகத்தானது. அன்று அதிகாலையில் எழுந்து, நீராடி, நித்திய கருமங்களை முடித்து சிவபெருமானை வழிபாடு செய்ய வேண்டும். பகல், இரவு ஆகிய இரண்டு காலங்களிலும் உபவாசம் இருந்து, கண்ணுறங்காமல் சிவனைத் தியானிக்க வேண்டும். பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, புராண படனம், பூஜை, ஆராதனை, சத்சங்கம் மற்றும் நற்செய்கை, நற்கருமங்களுடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் அவசியம். வில்வைத் தழைகளால் சிவனை அர்ச்சித்து வழிபடுதல் மிக உகந்தது. மறு நாட்காலை புனித தீர்த்தமாடி, பாரணம் செய்து, இயன்ற தான தருமங்களையும் செய்து விரதத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

*"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*

*"அன்பே சிவம்"* எனத் திருமூலர் கண்ட உண்மையைச் சிந்தனையில் கொள்வோமாக.



# சிவலிங்க தத்துவம்

- செ. வேலாயுதபிள்ளை

சிவலிங்கம் சைவசித்தாந்தத்தின் உயிர்நிலையை உணர்த்தி நிற்கின்றது. சொரூபசிவம் தடத்தசிவமாகப் படியிறங்குவதற்கு உரிய காரணத்தைக் காட்டி நிற்கின்றது. சிவலிங்கத் திருமேனியில் மும்மூர்த்திகளும், முப்பத்தாறு தத்துவங்களும், ஆறு அத்துவாக்களும் அடங்கியுள்ளன என்று நூல்கள் கூறும். இதன் விளக்கம் வருமாறு:

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் அநாதியாக உள்ளவை; பசுக்கள் அநாதியாகவே பாசத்தால் கட்டுண்டிருப்பவை; அவற்றைப் பாசத்தினின்றும் நீக்கி முத்தியடையச் செய்வதற்காகவே பதி தனது சொரூப நிலையிலிருந்து தடத்த நிலைக்குப் படியிறங்கி வருகின்றது. இந்நிலையிலே சிவத்தோடு கலந்து நிற்கும் சக்தி வெளிப்பட்டுச் செயலாற்றுகின்றது. சக்தியும் சிவமும் வேறன்மையிற் சக்தியின் செயல்கள் எல்லாம் சிவத்தின் செயல்களாகவே பேசப்படும். இதனால், சிவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் சக்தியைத் துணையாகக் கொண்டு செய்வன் என்று நூல்கள் கூறுகின்றன. படைத்தல் முதலிய தொழில்களுக்குச் சிவன் நிமித்த காரணம், சக்தி துணைக்காரணம், மாயை முதற்காரணம்,

மாயை என்னும் முதற்காரணத்திலிருந்து உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களை ஆக்கி, அவ்வுயிர்கள் பிறப்பெடுக்கச் செய்வதே படைத்தல் எனப்படும். பிறப்பெடுத்த உயிர்களைக் குறித்த காலம் உடலிலும் உலகிலும் நிறுத்தி வைத்தல் காத்தல் எனப்படும்; பலப்பல பிறப்புகளில் பிறந்து இறந்து உழலும் உயிர்களுக்கு ஒய்வுதரும் பொருட்டு அவற்றுக்காகப் படைத்த தனு கரண புவன போகங்களை முதற்காரணத்தில் ஒடுக்குதல் அழித்தல் எனப்படும்; உயிர்கள் இருவினைப் பயன்களாகிய இன்பத்துன்பங்களை நுகரும் வண்ணம் அவற்றை உலகப் பொருள்களில் அமிழ்த்தல் மறைத்தல் எனப்படும்; பக்குவம் எய்திய உயிர்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்தை விளக்குதல், அருளல் எனப்படும்; இவற்றுள் மறைத்தலைக் காத்தலிலும், அருளலை அழித்தலிலும் அடக்கி முதல்வன் தொழில்களை முத்தொழிலாகக் கூறுவதும் சைவ மரபு. படைத்தற்றொழிலைச் செய்யும் போது முதல்வன் பிரமனை நிலைக்களமாகவும், காத்தற்றொழிலைச் செய்யும்போது விட்டுணுவை நிலைக்களமாகவும், அழித்தற் தொழிலைச்செய்யும் போது உருத்திரனை நிலைக்களமாகவும் கொண்டு நிற்பன் என்று நூல்கள் கூறும்.

சிவலிங்க உருவம் படைத்தல் முதலிய முத்தொழில்களையும் (அல்லது) ஐந்தொழில்களையும் குறித்து நிற்கின்றது. படைத்தல் காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பது என்பதனால், இக்குறி இலிங்கம் எனப்பட்டது என்று இதற்குப் பொருள் விளக்கப்படுகின்றது. 'லிங்கம்', என்னும் வடமொழிச் சொல்லுக்கு அடையாளம் அல்லது குறி என்பது நேரான பொருளாகும். அச்சொல் லிங்கயதி (லிங் – வினையடி) எனவரும் வினைச்சொல்லின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல்லாகக் கொள்ளப்படுமிடத்து, அதற்குச் சித்திரிப்பது என்பது பொருளாகும். சைவநூலோர் இருவகையாகவும் பொருள் கொள்வர்.

சிவலிங்கத்தின் அமைப்பிலே இலிங்கம், பீடம் என்னும் இருபாகங்கள் உள்ளன. இலிங்கம் நிறுத்தப்பட்டிருக்கும் ஆசனமே பீடம் எனப்படுவது. இந்த அமைப்புக்குப் பீடலிங்கம் என்னும் பெயர் சிறப்பாக வழங்கும். இதிலே பீடம் சக்தியையும், இலிங்கம் சிவத்தையும் குறிக்கும். பின்வரும் சிவஞான சித்தியார்ப் பாடல் இதனை உணர்த்துகின்றது.

*"சத்தியும் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லாம்*
*ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாக*
*வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்*
*இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்"*

சக்தி பாகமான பீடத்தை ஆவுடையார் என்று சொல்லும் வழக்கம் உண்டு. திருமந்திரத்திலே இது ஆவுடையாள் எனக் காணப்படுகின்றது. இதற்குச் 'சீவான்மாக்களை உடைமைப் பொருளாகவுள்ள தேவி' என்று பொருள் கூறப்படுகின்றது. இச்சொல் ஆளுடையாள் என்பதன் திரிபு என்றும் அறிஞர்கள் சிலர் கூறுவர். எவ்வாறாயினும், அது சிவசக்தியைக் குறிக்கின்றது என்பது தேற்றம். 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையான் நடுவுள் நீயிருத்தி' என்று மணிவாசகர் கூறுமிடத்தும் 'உடையாள்' என்பது இப்பொருளிலே ஆளப்பட்டிருத்தல் காண்க.

உயிர்களுக்கு உபகரிக்கும் பொருட்டுப் பதியாகிய பரமசிவம் திருவருளை துணையாகக் கொண்டு படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும்போது சுத்தமாயையை நிலைக்களமாகக் கொண்டு அவ்வாறு செய்யும். அவ்வாறு செய்யும் போது திருவருள், இச்சை, ஞானம், கிரியை என மூவகைப்பட விளங்கித் தொழிற்படும். இவற்றுள் இச்சை யாண்டும் ஒரு படித்தாக நிகழும். ஏனைய இரண்டும் தனித்தும், ஒத்துக்கூடியும் ஏற்றக் குறைவாகக்கூடியும் தொழிற்படும். இவ்வேறுபாட்டிற்கு ஒப்பச் சுத்தமாயையில் உண்டாகும் விருத்திகள் நாதம், விந்து, சாதாக்கியம் (அல்லது சதாசிவம்)

மகேசுரம் (அல்லது ஈசுரம்), சுத்தவித்தை என ஐவகைப்படும். இவை ஐந்தும் சிவ தத்துவங்கள் (அல்லது சுத்த தத்துவங்கள்) என்று சொல்லப்படும். இத்தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சிவனும் அவ்வச் சத்தி பேதத்தால் வெவ்வேறு பெயர் பெறுவன். இவற்றுள் 'நாதம்' என்பது ஞானமாய் இருப்பது, அறிவுருவமான சிவனுக்கு இருப்பிடம்; 'விந்து' என்பது கிரியையாய் இருப்பது, செயல்வடிவான அருளுக்கு இருப்பிடம்; 'சாதாக்கியம்' (அல்லது 'சதாசிவம்') என்பது ஞானமும் கிரியையும் ஒத்திருப்பது, அறிவுஞ் செயலும் ஒத்த சதாசிவனுக்கு இருப்பிடம். இவன் அனுக்கிரகஞ் செய்பவன். 'மகேசுரம்' (அல்லது 'ஈசுரம்') என்பது கிரியை ஏறி ஞானங் குறைந்திருப்பது, மகேசுரனுக்கு இருப்பிடம்; இவன் மறைத்தல் செய்பவன். 'சுத்தவித்தை' என்பது ஞானமேறிக் கிரியை குறைந்திருப்பது. உருத்திரனுக்கு இருப்பிடம்; இவன் அழித்தல் செய்பவன்.

இவற்றுள் சிவம், சக்தி, நாதம், விந்து என்னும் நான்கும் பதியின் அருவத் திருமேனி வடிவங்களாகும். சதாசிவன் அருவுருவத்திருமேனி வடிவமாகும். மகேசுரன், உருத்திரன் என்னும் இருவரும், இவர்கள் அதிகாரத்தால் நடக்கும் பிரம விட்டுணுக்களும் உருவத்திருமேனி வடிவங்களாகும். இவ்வொன்பது வடிவங்களும் சிவலிங்கத்திலே அடங்கும் என்று திருமந்திரம் கூறுகின்றது.

*"மலர்ந்த வயன்பால் உருத்திரன் மகேசன்*
*பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்*
*நலந்தருஞ் சக்தி சிவன்வடி வாகிப்*
*பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே."*

பீடலிங்க அமைப்பின் அடியிலே பிரமனும் முடியிலே சிவனுமாக, ஒன்பது மூர்த்தங்களும் ஏறுவரிசையில் இருக்கும் பான்மையை இப்பாடல் குறிப்பிடுகின்றது. இங்கே 'ஐம்முகன்' என்பது சதாசிவனைக் குறிக்கும். பொதுப்பட நோக்கும் போது சிவமும் சக்தியும் அத்துவிதமாகக் கலந்து நிற்கும் இயல்பைப் பீடலிங்கம் உணர்த்துகின்றது. பகுத்து நோக்குமிடத்து ஞானசக்தியையும் (இலிங்கம்) கிரியாசக்தியையும் (பீடம்) ஒத்திருக்கும் சாதாக்கிய நிலையை, அதாவது பதியின் அருவுருவத் திருமேனியை அது குறிப்பதைக் காணலாம். மேலும் நுட்பமாகப் பகுத்து நோக்கும் போது பதியின் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகைத் திருமேனியிலும் அடங்கியுள்ள ஒன்பது வடிவங்களையும் இப்பீடலிங்கம் குறித்து நிற்பதைத் தெளியலாம். இன்னுமொரு கோணத்தில் நோக்கும் போது பிரமா (அடிப்பாகம்), விட்டுணு (நடுப்பாகம்), உருத்திரன் (மேற்பாகம்) ஆகிய மும்மூர்த்திகளும் சிவலிங்கத்திலே அடங்கியிருப்பதையும் உணரலாம்.

இன்னும் விந்து சத்தியானது பீடரூபமாக விளங்கிச் சுத்தமாயா காரியமும், அசுத்தமாயா காரியமும், பிரகிருதி காரியமுமாகிய மூவகை அத்துவாக்களையும் முப்பத்தாறு தத்துவங்களையும் வியாபித்து நிற்கும். ஞானசக்தி இலிங்க ரூபமாய் நின்று அவ்விந்து சத்தியைக் காரியப்படுத்தும் இயல்பே பீடலிங்கரூபமாம்.

( நன்றி: ஈழத்து செவ்வேள் படையல்கள் )


## AN ELUCIDATION OF *THE TIRUPPASURAM*

## திருப்பாசுரத்தின் விளக்கம்

*(ஆங்கில நூல்)*

யாழ். சைவ பரிபாலன சபையினரால் முன்னர் வெளியிடப்பட்ட
மேற்படி நூலை அகில இலங்கை இந்து மாமன்றம் மறுபிரசுரமாக
வெளியிட்டுள்ளது.
தமிழ்ப் பாசுரங்களுக்கு ஆங்கில மொழியிலான விளக்கங்களுடன்,
வெளிவந்திருக்கும் இந்நூல், இந்து சமயத்தைக் கற்கும் மாணவர்களுக்கும்,
சைவசித்தாந்த தத்துவத்தில் அக்கறையுள்ளவர்களுக்கும் மிகவும்
பயனுள்ளவகையில் அமைந்திருப்பதுடன், இந்து சமயத்தின் முக்கிய
அம்சங்களை விளக்கும் வகையிலான அனுபந்தத்தையும் கொண்டிருக்கிறது.
இந்நூலை ம ன்றத் தலைமையகத்திலிருந்து, பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதி ஒன்றின் விலை : ரூபா 50/=**

*தபால் மூலம் பெறுவதனால் 55/= ரூபாவுக்குரிய காசோலை அல்லது காசுக் கட்டளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.*
*பணம் பெறுபவர் பெயர்: அகில இலங்கை இந்து மாமன்றம் என்றும்,*
*பணம் பெறும் இடம்: கொழும்பு என்றும் எழுதப்படவேண்டும்.*



# சிவனுக்குப் பிரியமான இராத்திரி சிவராத்திரி

*சிவநெறிச் செல்வர், அறநெறி அன்பர் வே. ச. சுப்பையா*

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவ சமயம் ஆகும். சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள் சைவ சமயிகள் ஆவர். சைவ சமய இறைவழிபாட்டிலே விரத அனுஷ்டானங்கள் முக்கிய பாகமாக அமைகின்றது. சைவ சமயிகள் அனுஷ்டிக்கும் விரதங்கள் பல உண்டு. அவை எல்லாம் ஆன்மா தூய்மை அடைந்து பக்குவ நிலை எய்தி இறைவனின் கருணையைப் பெறுவதற்குப் பேருதவி புரிகின்றன. இவ்வாறு அனுஷ்டிக்கும் விரதங்களுள் சிவ விரதங்களும் ஒன்றாகும். இச்சிவ விரதங்களில் முதன்மையானதும் மகத்துவம் மிக்கதும் சிவராத்திரி விரதம் ஆகும்.

சிவராத்திரி என்பது சிவன் இராத்திரி என இரு சொற்களைக் கொண்ட பதமாகும். சிவனுக்குரிய இராத்திரி ஆகும். சிவம் என்றால் இன்பம் என்றும், இராத்திரி என்றால் இரவு என்றும் வடமொழியில் கொள்ளப்படுகிறது. எனவே சிவராத்திரி என்றால் இன்ப இரவு என்பது கருத்தாகும்.

எப்பொழுதுமே சிவனை வழிபடும் நாளாக இருந்தும் சிறப்பாக சிவராத்திரி எனப் பெயர் சூட்டிய ஒரு தினமாகிய மாசி மாதத்தின் அபரபட்ஷத்தில் சதுர்த்தசி கூடிய தினத்தில் இராப் பொழுதிற்கு மாத்திரமே மகா சிவராத்திரி எனப் பெயர் சூட்ட வேண்டியதன் அவசியத்தை நாம் நோக்கின் சிவனுக்குரிய பல சிறப்பான விசேஷ அம்சங்கள் அமைந்து விளங்கும் நாளானபடியினால் இப்பெயர் சூட்டப்படலாயிற்று என்பது புலனாகிறது.

இந்நாளிலே எம்பெருமான் சோதிப்பிளம்பாய் நின்று பிரம்மா, விஷ்ணுவிற்கு அருள்புரிந்தமையினாலும் அன்றைய தினத்தை விரதமாக அனுஷ்டித்து சிவபதம் அடைந்தவர்களின் மேன்மையினாலும் இந்நாள் சிவராத்திரி எனப்படலாயிற்று. சிவபெருமானுக்கு அத்தியந்த பிரியமுள்ள இராத்திரி சிவராத்திரி என்பதனால் இது மகா சிவராத்திரி என வழங்கப்படுவது ஏற்புடைத்து.

இவ்வுலகின் கண் ஆன்மாக்கள் மாயையின் தோற்றமாகிய பல வகையான உடம்புகளிலே வந்தவதரித்து பாவம், புண்ணியம் என்ற இரு வினைகளையும் இயற்றி அவற்றின் நிமித்தம் மீண்டும் மீண்டும் தொலையாத பிறவிகளை எடுத்து உழலுகின்றன. இந்த ஆன்ம பேதங்களின் இயக்க காலம் ஒரு இறுதி நிலையை அடையும். இவ்வாறு இறுதி நிலையை அடையும் காலமே உகாந்த காலமென்றும், ஊழிக்காலமென்றும், உலகம் முடிவுக் காலமென்றும் சொல்லப்படுகின்றது. இந்நாளிலே உலகம் முழுவதும் பேரிருளால் கவ்வப்பட்டு உலகம் முழுதும் மறைக்கப்பட்டு எங்கும் சுடுகாடு போல் காட்சியளிக்கும். அப்போது தான் இறைவன் சுடலையாண்டியாக ஊழிக்கூத்தை ஆடுவான்.

இவ்வாறு நர்த்தனமாடும் எம்பெருமானின் பாத தாமரை களிலே ஆன்ம கோடிகளெல்லாம் அடைக்கலம் புகுந்திருக்கும். எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் சுரந்து நிற்பர். இவ்வாறான செயலெல்லாம் நிகழ்ந்த ஒரு இருள் சூழ்ந்த நாள்தான் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி ஆகும் என்பது சைவ சமயத்தின் கொள்கையாகும். எம் பெருமானிடத்தே தஞ்சம் புகுந்து அவரடி போற்றி பிறவிப் பெருங்கடலை கடந்து ஈடேற்றம் அடைந்த இவ்விரவு மகத்துவமானதாகும் என்பது தெளிவானது. உலகத்தின் சங்கார காலமும் சிருஷ்டியும் ஒரே நேரத்தில் நடந்த இரவுதான் இச் சிவராத்திரி தினமாகும்.

பிறவி எனும் பெருங்கடலின் ஒரு கரையின் கண் நிற்கும் நாம் பேரின்பம் என்னும் மறுகரையை அடையப் பிறவி எனும் பெருங்கடலை கடந்தாக வேண்டும். இதற்குச் சைவ சமயம் எனும் தோணியில் ஏறி சிவ சிவ எனும் தண்டு கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடந்து பேரின்பம் எனும் நிலையை அடைந்து என்றும் அழியா அமரராக வேண்டும். இறைவனடியைத் தஞ்சம் எனக் கொண்டு வீடு பெற்றுய்ய வேண்டியது நாம் பிறவி எடுத்ததன் நோக்கமாகும். இதற்கு இச்சிவராத்திரி விரதம் ஒரு சிறப்பான வழியாகும்.

இச்சிவராத்திரி எனும் மகத்துவ நாள் பற்றிய கதைகளை இனிக் கவனிப்போம். ஆயிரம் சதுர்யுக காலம் பிரம்ம தேவனிற்கு ஒரு பகற்பொழுது கழிந்து இரவு வரும் போது பிரம்ம தேவன் துயில் கொள்வார். இத்துயிலுக்கு முந்தி பிரம்ம தேவனால் படைக்கப்பட்ட உலகமும் உயிரும் அவர் துயிலும்போது இரவில் ஒருங்கே அழிந்தொழியும். இது பிரம்ம கற்பம் ஊழி எனப்படும். முன்பு ஒரு முறை ஊழியில் உலகமெல்லாம் அழிந்து போக உமையம்மை இறைவனை வழிபட்டு நான்கு சாமமும் பூசை செய்து உலகத்தை உய்விக்கும் பேற்றைப் பெற்று இவ்விரவிற்கு சிவராத்திரி எனப்

பெயர் வைத்து இவ்வாறே வழிபடுபவர்களுக்கும் சாயுச்சிய பதவி கிடைக்க வேண்டுமென சிவனிடம் அருளைப் பெற்றுக் கொண்டார். வேடன் ஒருவன் காட்டிற்குச் சென்று வேட்டையாடலானான். அப்போது ஒரு புலி அவனைக் கண்டு துரத்தியது. ஓடினான் ஓடினான். இறுதியில் உலகை இருள் கவ்வத் தொடங்கியதால் புலியிலிருந்து தப்புவதற்காக ஒரு மரத்தின் மேல் ஏறினான். புலியும் மரத்தின் கீழேயே நின்றது. கீழேயிருக்கும் புலிக்கு இரையாக வேண்டுமென்று எண்ணி அம்மரத்திலுள்ள இலைகளைப் பறித்து ஒவ்வொன்றாகப் போட்டபடியே விடியும் வரை விழித்திருந்தான். அவன் ஏறி இருந்த மரம் வில்வ மரம். அதனடியிலே ஒரு சிவலிங்கமும் அமைந்திருந்தது. வேடன் பறித்துப் போட்ட வில்வ இலைகள் மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்தது. இந் நிகழ்ச்சி நடைபெற்ற இரவு மகா சிவராத்திரியாக இருந்தமையால் வேடன் போட்ட இலைகள் இறைவனுக்கு வில்வ அர்ச்சனையாக அமைந்துவிட்டன. இதனால் சிவபெருமானின் கடாட்சத்திற்கு ஆளாகி அவன் மோட்சப்பேற்றை எய்தினான்.

**வாழ்க்கை**

வாழ்க்கை என்பது பல வகையான நிகழ்ச்சிகளைக் கொண்டது. சில சமயம் திட்டமிட்டு நடக்கிறது. சில சமயம் நம்மை மீறி விதிகளுக்குட்பட்டு நடந்து வருகிறது. அதற்கு நம் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். அதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதை நாம் புத்திசாலித் தனத்தினால் கையாள வேண்டும். அவைதான் மனித வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும்".

(குருஜி ஸ்ரீவிஸ்வநாத்)

ஒரு கால் பிரம்மாவும் விஷ்ணுவும் செருக்குற்று தானே, முழுமுதற் கடவுளெனக் கருதி ஆணவம் கொண்டு தம்மிடையே பகையுற்றனர். இதனால் இவர்களின் ஆணவத்தை அழித்து செருக்கை அடக்க திருவுளம் கொண்ட எம்பெருமான் இருவரிடையேயும் சோதி வடிவமாகத் தோன்றினார். இருவரிற்கும் அசரீரியாக, இச் சோதியின் அடியையோ முடியையோ காண்பவரே முழுமுதற் கடவுளாவர் என இறைவன் கூறினார். இதற்கமைய பிரம்மா அன்னப்பட்சியாக மாறி முடியைக் காணச் சென்றார். விஷ்ணு பன்றி உருவெடுத்து அடியைத் தேடிச் சென்றார். இறுதியில் இருவரின் ஆணவம் நீங்கப் பெற்றுச் சிவபெருமானே முழுமுதற் கடவுளென உணர்ந்து தமது செருக்ககலப் பெற்றனர். இவ்வாறு இறைவன் சோதி வடிவமாக நின்றருளிய தினமே சிவராத்திரி ஆகும்.

இவ்வாறு பிரம்மா, விஷ்ணுவிற்கு சோதிவடிவாகி நின்று ஆணவத்தை அகற்றியது போன்று மலமாகிய இருட்டில் நின்றுழலும் ஆன்மாக்கள் மீதும் அனுதாபம் கொண்டு அவர்களுக்குச் சிவஞான ஒளியைக் கொடுத்து இறைவன் ஈடேற்றுவான் என்னும் உண்மை தெளிவாகின்றது. ஆகவே ஆன்ம ஈடேற்றம் பெற்று இறைவனின் அருவுருவத் திருமேனியிலே ஒடுக்கம் பெறுவதற்குச் சிவராத்திரி விரதம் ஒரு மூலமார்க்கமாகும்.

சிவராத்திரி அன்றிரவு நான்கு சாமப் பூசைகள் நடைபெறும். இது எமது மனம், புத்தி, சித்தி, அகங்காரம் எனும் அந்தக்கரணங்களையும் அழித்து இறைவன் எமது உடல் எனும் உலகில் கவ்விய ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் நீக்குவதற்காகத் தமது சிவஞான ஒளியைச் சிவராத்திரி அன்று காட்டியருளி ஒளிரும் பொன் போல எமது தேகத்திலுள்ள அழுக்குகளை ஞான ஒளியினால் நீக்கி சுத்த ஆன்மாவாக்கி தமது திருவடியின் கண் சேர்த்தருளுகின்றார். இவ் உண்மையினை மேற்கூறப்பட்ட கதையும் சிவராத்திரியும் நன்கு எமக்குப் புலப்படுத்துகின்றன.

சிவராத்திரியிலே பகல் முழுவதும் எதுவும் உண்ணாமல் சிவன் கோவிலிலே தொண்டு புரிந்து இரவு முழுவதும் உறக்கமின்றி விழித்திருந்து நான்கு சாமப்பூசைகளையும் கண்டு வழிபட்டு மன ஒடுக்கத்தோடு உபவாசம் இருந்து அதிகாலையில் நீராடி இறைவனை வழிபட்டுப் பாறணம் செய்வதே சிவராத்திரி விரத ஒழுங்காகும்.

எதுவும் உண்ணாமலிருக்க முடியாதவர்கள் காலை ஏதாவது நீராகாரம் பருகலாம். அதுவும் இயலாதவர் ஒரு வேளை உண்ணலாம். நான்கு சாமமும் விழித்திருந்து பூசை பார்க்க இயலாதவர்கள் இலிங்கோற்பவ காலம் எனும் நடுச்சாம வேளை வரையிலாவது உறக்கமின்றி இருத்தல் நன்று. இக்காலத்தில் தெய்வ தரிசனம் செய்வது உத்தமோத்தம புண்ணியமாகும். இலிங்கோற்பவ மூர்த்தி என்பது சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தி பேதங்களினும் ஒன்று. அதனடிப் பாகமும் முடிப்பாகமும் கண்ணுக்குப் புலப்பட மாட்டா.

எனவே நாம் சிவபெருமான் மீது அன்பு கொள்ள வேண்டும். அந்தக் கூத்தப் பெருமானின் பாதாரவிந்தங்களை அன்றாடம் சிந்தித்து வழிபட வேண்டும். எம்மைப் பிடித்துள்ள இருள் அகல இறைவனின் சிவஞான ஒளியினைப் பெற வேண்டும். சிவஞான வழியினைப் பெற்று உய்ய வேண்டுமானால் எம்பெருமானின் பாதத்தாமரைகளில் தஞ்சம் புகுந்து அவன் திருப்போதுக்கே என்றும் ஆளாகி வாழ வேண்டும். இவைகளுக்கெல்லாம் ஒரு சந்தர்ப்பமாக, ஒரு மார்க்கமாக எம்மை இறைவனுடன் பிணைக்கும் வழியாகிய மகா சிவராத்திரி விரதத்தைப் பூரண விரத அனுட்டான முறையில் அனுஷ்டித்து எம்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்று ஆன்ம ஈடேற்றம் பெற்றுய்வோமாக.

மரத்தின் அடியில் நின்று கைகளைத் தட்டினால் மரத்தில் வாழும் பறவைகள் பறந்தோடி விடுகின்றன. அதுபோல, இறைவனின் திருப்பெயரைச் சொல்லிக் கைகளைத் தட்டிப் பாடினால் தீய எண்ணங்களாகிய பறவைகள் பறந்தோடி விடுகின்றன.

(இராமகிருஷ்ணர்)

# தங்கத் தளிர் ஞாயிறே வருக! வருக!

துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்.

கை உரக்க கமம் புரியும் உழவர் குழாம்
கரம் நிறை நெல்மணிகள் களைந்தெடுக்க
வையகமே வானுயர வாழ்ந்து நின்றிட
வளம் நிறைந்த ஒளிதரும் கதிரவனாய்
நையும் ஈழத் தமிழினத்தின் நலன்கள் சிறக்க
நாடு செழித்து உலகோர் உளம் மகிழ
தை மகளோடு தாரணிக்கு தகும் வரம் தந்திட
தங்கத் தளிர் ஞாயிறே வருக! வருக!

மை விழி மங்கையர் மகிழ் கரும்பு சுவைக்க
மானமுள்ள காளையர் மல்யுத்தம் புரிய
மெய் மறையோதியே அந்தணர் வேள்வி புனைய
மெருகு தமிழ்த்திராவிடமோங்கி விரிந்திட
தெய்வ அருள் சூழ்ந்தே ஆன்மீகம் இசிந்திட
தேன் சுவை முக்கனிகள் திகழ்ந்து விளைய
தை மகளோடு தாரணிக்கு தகும் வரம் தந்திட
தங்கத் தளிர் ஞாயிறே வருக! வருக!

சைவ நீதி சான்றுடனே விளங்கி விரிந்திட
சர்வ மங்களமும் புவிவாழ்வோர் பெற்றிட
ஐயமின்றி அனைவரும் நிமிர்ந்து வாழ
அழகான அமைதிப்பூங்கா எங்கும் மிளிர
செய் தொழில் அனைவர்க்கும் சிறந்தோங்க
சேர் இயற்கை வளம் பூமியெங்கும் பொழிய
தை மகளோடு தாரணிக்கு தகும் வரம் தந்திட
தங்கத் தளிர் ஞாயிறே வருக! வருக!



# விநாயக வணக்கம்

செல்வி க. தங்கேஸ்வரி, பி. ஏ. (தொல்.) சிறப்பு

## உருவகம்

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் வடிவமாக, உருவமாக விநாயர் வடிவம் அமைந்துள்ளது. பிரபஞ்ச இயக்கத்தின் ஆதார சுருதியாக அமைவது "ஓம்" என்னும் ஓசை. ஓசை வேறு; ஒலி வேறு. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என இறைவனைப் பாடுவதிலிருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

*"ஓம் என்னும் நாதத்தின் உருவாய் அமைந்தவன்*
*ஒலி என்ற பேதத்தின் வடிவாய் இசைந்தவன்"*

எனப் பாடுகிறார் ஒரு கவிஞர்.

யானை முகம் (ஓம்), பேழை வயிறு (பிரபஞ்சம்), பாசாங்குசம் (மன ஒடுக்கம்) என விநாயகரின் தோற்றத்துக்குப் பல்வேறு தத்துவங்கள் கற்பிக்கப் பட்டுள்ளன. யானையின் உருவில் அமைந்த விநாயகருக்குச் சின்னஞ் சிறு எலியை வாகனமாக அமைத்தற்கும் ஒரு தத்துவம் கற்பிக்கப்படுகிறது.

எலி ஆசாபாசங்களின் உருவகம். அதை அடக்கி வைப்பது ஞானம். ஞானத்தின் வடிவம் கணபதி.

விநாயகரின் ஒரு கையில் உள்ள மோதகம், மறுகையில் உள்ள ஒற்றைக் கொம்பு முதலியவற்றுக்கும் தத்துவங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. மோதகத்தின் வெளித்தோற்றம் உலகம் எனவும் அதனுள் நிறைந்திருக்கும் பூரணம் பிரம்மம் என்றும் கூறுவர். ஒடித்த கொம்பு ஆணவ மலத்தின் உருவகம். ஆணவத்தை அடக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

இவ்வாறு முழுமுதற் கடவுளாக அமைந்த விநாயகரைப் பின்னர் சிவன்– பார்வதியின் மகனாகக் கற்பித்து மகிழ்ந்தனர் பக்தர்கள். இதனை "ஏகம் சத். விப்ரா பகுதா வதந்தி" (உண்மைப் பொருள் ஒன்றே – ஞானியர் அதனைப் பல்வேறாகக் காண்கின்றனர்) எனலாம்.

## புராணக் கதைகள்

விநாயகரைப் பற்றிய புராணம் ஒன்று உள்ளது. இதனை 'விநாயக புராணம்' என்பர். இதன் கருத்தை உள்ளடக்கியதாகப் பின்னர் "பிள்ளையார் கதை" என்னும் நூல் தோன்றியது. இப்புராணங்களை ஆதாரமாகக் கொண்டு பல்வேறு கதைகள் பக்தி மார்க்கத்தில் உருவாகியுள்ளன. அவை –

(அ) களிறும் பிடியும் கலவி செய்வதைக் கண்டு உணர்ச்சிவசப்பட்ட உமை சிவனுடன் கலந்ததால் பிறந்த பிள்ளை விநாயகர் என்பது ;

(ஆ) தேவர்களை வருத்திய கஜமுகாசுரனை வதம் செய்யச் சிவபெருமான் விநாயகரை ஏவினார். விநாயகர் தனது கொம்புகளில் ஒன்றை ஒடித்து, கஜமுகாசுரன் மேல் எறிந்து அவன் மார்பைப் பிளக்க அவன் மூஷிக (எலி) வடிவில் அடங்கி, விநாயகருக்கு வாகனமாகினான் என்பது ;

(இ) இராவணன் தவம் செய்து சர்வ வல்லமை படைத்த சிவலிங்கத்தைக் கீழே வைக்காது கொண்டு வருகையில், அவனுக்குச் சலக்கடுப்பை உண்டாக்கி, அவன் முன் பிராமணச் சிறுவனாகத் தோன்றி, அச்சிவலிங்கத்தை நிலத்தில் வைத்து அவன் கர்வத்தை அடக்கினார் என்பது.

இவற்றைப் படிக்கும் பிற மதத்தவரும் நம்மவர்களிற் சிலரும் இவற்றை எள்ளி நகையாடினாலும், இக்கதைகள் இந்துக்கள் மத்தியில் அன்று முதல் இன்றுவரை இறைபக்தியை வளர்த்து வருகிறதேயன்றி அவர்களைக் கிஞ்சித்தும் தளம்ப விடவில்லை என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வாறான புராணக் கதைகளும் (Mythology) கர்ண பரம்பரைக் கதைகளும் (Legends) தொன்மை வாய்ந்த சமூகங்களான கிரேக்கம், எகிப்து, ரோமாபுரி, திபெத், யப்பான், சீனா போன்ற சமூகங்களில் இருப்பதும் அவை இன்றுவரை தொடர்ந்து நிலைத்திருப்பதும் மனங்கொள்ளத்தக்கன. இவை இவ்வழிபாட்டு முறைகளின் தொன்மைக்கு ஆதாரமாகின்றன.

## வரலாறு

விநாயக வணக்கம் தேவகாலத்துக்கு முந்தியது என்றும், இந்து சமயத்தின் நான்கு வேதங்களில் ஒன்றான இருக்கு வேதத்தில் விநாயக வணக்கம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகின்றது. இங்கு மட்டுமன்றி பர்மா, கம்போடியா, திபெத், சீனா, யப்பான் முதலிய நாடுகளிலும் விநாயக வணக்கம் தொன்மைக் காலத்தில் இடம் பெற்றிருந்தது எனக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் ஆதிசங்கராச்சாரியர் இந்து சமயத்தைச் சண்(ஆறு) பிரிவுகளாக வகுத்தபோது விநாயகர் வழிபாடு "காணபத்தியம்" என அழைக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக கி. பி. 6ம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் சாளுக்கிய நாட்டின் வாதாபி நகரில் இருந்து விநாயகர் சிலை ஒன்று தமிழகத்துக்குக் கொண்டு வரப்பட்டது என அறிகிறோம். வாதபிப்புலிகேசிக்கு எதிராக நரசிம்மவர்மப் பல்லவன் நடாத்திய போரில் வெற்றி பெற்றபின், அவனது தளபதியான பரஞ்சோதியார், வாதாபியிலிருந்து ஒரு விநாயகர் சிலையைத் தன்னுடன் எடுத்து வந்தார். அதைத் தனது ஊரான திருச்செங்காட்டாங்குடிக்கு எடுத்துச் சென்று அங்கே அவ்விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்துவைத்தார். இவரே பின்னர் சிறுத்தொண்ட நாயனார் ஆகினார் என்பது வரலாறு.

இன்றும் சங்கீதக் கச்சேரிகளில் முதலில் "வாதாபி கணபதிம் பஜே" என்னும் விநாயக வணக்கம் இடம் பெறுவதை யாவரும் அறிவர்.

பிறநாடுகளில் விநாயக வணக்கம் இடம்பெறுவது, ஒரு காலத்தில் திராவிட நாகரிகம் (இந்து நாகரிகம்) அந்நாடுகளில் பரவியிருந்தது என்பதற்குச் சான்றாகிறது. சுவாமி விபுலானந்தர் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் சிந்துவெளி நாகரிகத்தில் இருந்தே எபிரேயம், எகிப்து, பாபிலோனியா முதலிய நாடுகளுக்கு இந்து நாகரிகம் பரவியது எனக் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத் தக்கது. இலங்கையில் சிங்களவர் மத்தியில் "கணதெய்யொ" என விநாயக வணக்கம் இடம் பெறுவதும் மனங் கொள்ளத்தக்கது.

## வழிபாடு

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து.*

என்னும் வரிகளினால் கர்மவினையைப் போக்குவது விநாயக வழிபாடு என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.
இதனையே நமது தேவாராசிரியரும் –

*"மண்ணுலகத்தினில் பிறவி மாசற*
*எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்*
*கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்*
*பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.*

எனப் பாடினார். ஆம் "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்" என்பதில் சந்தேகமில்லை. சமஸ்கிருதத்தில் ஒரு சுலோகம் விநாயக வணக்கத்தை இவ்வாறு குறிப்பிடுகிறது :

*"ஓம் கஜானனம் பூதகணாதி சேவிதம்*
*கபித்த ஜம்பு பலசார பட்சிதம்*
*உமா சுதம் சோக விநாச காரணம்*
*நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்"*

சமஸ்கிருதத்தில் ஏராளமான விநாயக தோத்திரங்கள் இருந்த போதும் மேற்படி சுலோகத்தை எல்லா ஆலயங்களிலும் பூசகர் கூறுவர். காரணம் விநாயகரை "பூத கணாதி சேவிதம்" செய்கின்றன. நமது "சோக விநாசகாரணமாக" அவர் இருக்கிறார்.

எந்த ஒரு நூலையும் ஆக்கும் போது, விநாயக வணக்கம் முதல் பாடலாக இடம் பெறும். அவை ஒவ்வொன்றும் நவில் தொறும், நவில் தொறும் நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றன. இவை எல்லாவற்றையும் விட "சீதக்களபச் செந்தாமரைப்பூம் பாதச் சிலம்பும் பலவிசைபாட" எனத் தொடங்கும் ஔவையார் அருளிச் செய்த "விநாயகர் அகவல்" முக்கியமானது. ஔவையாரைக் கைலாயத்தில் இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்த இத்தோத்திரம் மனித குலத்துக்கு வழிபாட்டுத் தோத்திரமாகும்.

## பக்தர்களின் பரவசம்

விநாயகன் (வி+நாயகன்) தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவன், நைஷ்டிய பிரம்மச்சாரி (நித்திய பிரம்மச்சாரி) ஆனாலும் அவரை சித்தி, புத்தி என்னும் இரு மனைவியர் உடைவராக வடஇந்தியாவில் கற்பித்துள்ளனர். சித்தி, புத்தி என்பதும் ஞானத்தின் மறுபெயர்களே. சித்தம், புத்தி என்பன Mind, Intellect என்பவற்றைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இரு மனைவியர் விநாயகருக்கு இருப்பதற்கு, ஆதாரமான புராணக் கதை இருந்தாலும், தமிழகத்திலும் நம் நாட்டிலும் அவரைப் பிரம்மச்சாரியாகவே கொள்கின்றனர். அதன் காரணமாகவே நமது திருமணங்கள் பெரும்பாலும் விநாயகர் ஆலயங்களிலே நடைபெறுகின்றன என்றும் கூறுவர்.

எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு ஆலயங்கள் தேவை இல்லை என்பதே போல், அவரை ஆற்றங்கரையிலும் அரச மரத்தடியிலும் உட்காரவைத்து விட்டார்கள் நமது பக்தர்கள். ஒரு நீண்ட பயணம் செய்யும்போது வழியில் நாம் காணும் பிள்ளையார்கள் பற்பல. அவரை வணங்காது சென்றால் பயணத்தில் இடர்வரும் என்பது பொதுவான ஒரு நம்பிக்கை. இது மூடநம்பிக்கை அல்ல. பயணம் செய்வோர் இறைவனையும் நினைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு நினைவூட்டல் உத்தியே இது எனலாம்.

இன்னும் சில எளிதான முறைகள் பிள்ளையார் வணக்கத்தில் உள்ளன. பூஜைகளின்போது மஞ்சளில் அல்லது சாணத்தில் ஒரு உருண்டை செய்து அதில் அறுகம்புல்லைச் செருகிவிட்டால் பிள்ளையார் தயார். பிராமணர்கள் இப்படிச் செய்வதை நாம் அவதானிக்கலாம் (அறுகம்புல் தெய்வீக சக்தி வாய்ந்தது. அது சித்த வைத்தியத்தில் ஒரு முக்கிய மூலிகை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது).

## நைவேத்தியங்கள்

இந்துக்களுக்கு விநாயக சதுர்த்தி விரதம் முக்கியம். அவ்வாறே பெருங்கதை என்னும் திருக்கார்த்திகை உற்சவம் தொடர்பான ஒரு விரதமும் முக்கியமானது. இவை ஒவ்வொன்றுக்கும் பின்னால் ஒரு புராணக் கதை உள்ளது. அவை இக்கட்டுரைக்கு முக்கியமல்ல.

விநாயகருடைய நைவேத்தியப் பொருள்களும் பிற தெய்வமூர்த்திகளுக்குரியவற்றைவிட வித்தியாசமாக இருப்பது கண்கூடு. அப்பம், முப்பழம், அவல், பொரி முதலிய எளிய பொருட்களே விநாயகருக்கு ஏற்றதாகின்றன.

விநாயகருக்குரிய நைவேத்தியப் பொருட்கள் பற்றி அருணகிரிநாதர் பாடிய ஒரு பாடல் இவ்வாறு கூறுகிறது:

*"இக்கவரை நற்கனிகள் சர்க்கரை*
*பருப்புடன் நெய் எள் பொரியல்*
*துவரை, இளநீர், வண்டெச்சில்*
*பயறப் பவை, மிக்க அடிசிற் கடலை*
*முப்பழம் அப்பமும் நிகழ் பால் தேன்"*

இவை மிக எளிதான பொருள்கள் என்பதுடன், பூர்வீகக் குடிகளின் உணவு வகைகள் என்பதும் கண்கூடு. பக்தர்கள் தமக்கு மிக விருப்பமானவற்றை இறைவனுக்கு நைவேந்தியமாகப் படைப்பார்கள். விநாயக வணக்கத்தின் தொன்மையும் இங்கு மறைமுகமாக வெளிப்படுகிறது.

எல்லையற்ற பிரபஞ்சவெளியில், ஓங்கார நாதத்தில் உலகம் உருவானது என்ற உண்மையை உள்ளடக்கிய விநாயக வணக்கம் என்றும் மக்களின் விக்கினங்கள் தீர்த்து, வினைகடிந்து, அருள்பாலித்து வருவது கலியுகத்தில் நாம் கண்ட உண்மையாகும்.

# இந்து சமய சமுதாயக் கருத்துக்களைக் கூறுவதில் தர்மசாஸ்திரங்கள் பெறும் முக்கியத்துவம்.

செல்வி. க. காந்திமதி B.A.Dip in Ed.

இந்து சமய வளர்ச்சியை அறிவதற்கு எமக்குக் கிடைக்கின்ற முதல் நூல் வேதமேயாகும். வேதகாலம் தொடக்கம் இன்று வரையும் எமக்குக் கிடைக்கின்ற நூல்களை சமய நூல்கள் எனக் கூறுகின்றோம். இந்நூல்கள் அனைத்தும் இந்து சமயத்திலுள்ள கடவுள், வழிபாட்டு முறைகள், வேள்வியாக கிரியைகள், சடங்குகள், தத்துவங்கள் ஆகியன பற்றிய சமயக் கருத்துக்களையே எமக்கு எடுத்து விளக்குகின்றன. வேதகாலத்துக்கு பின்தோன்றிய நூலாகிய புராண இதிகாசம் என்னும் நூலும் சமய சமுதாயக் கருத்துக்களை மட்டுமே எடுத்துக் கூறுகின்றன. ஆனால் தர்மசாஸ்திரம் என்னும் நூல் ஏனைய நூல்களிலிருந்து வேறுபட்டு சமயக் கருத்துக்களையும், சமுதாயக் கருத்துக்களையும் நல்லொழுக்க கருத்துக்களையும், மனிதனுக்குரிய கடமைகள், ஞானிகளுடைய அறிவுரைகள், நற்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

தர்மசாஸ்திரங்கள் ஏனைய நூல்களை விடச் சிறந்து விளங்குவதற்குப் பல காரணங்கள் அமைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டும் அதே வேளையில் தர்மசாஸ்திரங்கள் ஏன் தோற்றம் பெற்றன என்பதையும் விளக்குதல் வேண்டும். அதாவது ஆரம்பகால சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் காணப்பட்டதனால் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. மற்றும் பலியிடுதல் உடன் கட்டை ஏறுதல் போன்ற மூடபழக்க வழக்கங்களும் சமூகத்தில் மிகுந்து காணப்பட்டன. எனவே இவற்றை நீக்கி சமூகத்தில் எல்லாமக்களும் சமம் என்னும் கருத்தை நிலைநிறுத்த இத்தர்மசாஸ்திரங்கள் தோற்றம் பெற்றன எனலாம். ஆரம்ப கால சமுதாயத்திலே நிலவுடமை காணப்பட்டதால் சொத்துரிமைக் கருத்துக்களும் நிலவின. மற்றும் மக்களிடம் அறிவுவளர்ச்சி ஏற்பட்டதினால் போட்டியும் போர்களும் ஏற்படலாயின. இதனால் சட்டம், நீதி என்பனவற்றை சமுதாயத்திலே ஏற்படுத்தி சமூக ஏற்றத்தாழ்வுகளை உடைத்து அறிவதற்கு அறிவு நூல்கள் எழுதுவது முக்கியமானதாகும். இந்த வேளையில் புராண இதிகாசங்களில் கூறப்பட்ட கருத்துக்களை பின்பற்றி அவற்றைவிட மிகச் சிறப்பாகவும் விளக்கமாகவும், விரிவாகவும் தர்ம சாஸ்திரங்கள் வட இந்தியாவில் தோன்றின.

வேதங்களை சுருதி என அழைப்பர். சுருதி என்பதன் கருத்து செவிவழியாகக் கேட்டல் என்பதாகும். ஆனால் தர்மசாஸ்திரம் என்பது அறிவு நூலாக இருப்பதாலும் மனதால் நினைத்தலினாலும் இதனை ஸ்மிருதி என அழைப்பர். இந்து சமூகத்தின் அமைப்பு கடமைகள் அறம் பொருள், இன்பம், வீடு தனிமனித தர்மங்கள், அரச கடமைகள், சட்டம் நீதி நிர்வாகம், பொருளாதாரக் கொள்கை என்பனவற்றை எடுத்துக் கூறுவதினால் தர்மசாஸ்திரங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வேதங்க்ளையும் புராணங்களையும் இதி காசங்களையும் அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற தர்மசாஸ்திரங்கள் பல பிரிவுகளாகக் காணப்படுகின்றது. அவையாவன மனுதர்ம சாஸ்திரம், ஞாஞ்ஞியவல்லிய தர்மசாஸ்திரம், பிரகஸ்பதி தர்மசாஸ்திரம், பரராச தர்மசாஸ்திரம் என்பனவாகும். இவற்றில் மிகவும் முக்கியமானது மனுதர்ம சாஸ்திம் என்பனவாகும்.

ஒவ்வொரு தர்மசாஸ்திரங்களும் அவற்றை உருவாக்கிய ஆசிரியர்களின் பெயர்களினாலேயே அழைக்கப்பட்டது. இந்தவகையில்தான் மனு தர்ம சாஸ்திரமும் முக்கிய இடம் பெறுகின்றது. இதனை மனு என்பவர் உருவாக்கினார். இது 12 அத்தியாயங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இது கி. மு. 2ம் நூற்றாண்டிலே உருவாக்கப்பட்டது. சமூகத்தில் காணப்பட்ட பிரச்சினைகளை நீக்கவே இது உருவாக்கப்பட்டது. மனுதர்மசாஸ்திரத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்க முடியும்.

(1) வர்ணாச்சிரம தர்மக் கடமைகள்
(2) சட்டம் நீதி நிர்வாகம்
(3) கன்மம் மறுபிறப்பு என்பனவேயாகும்.

மனுதர்மசாஸ்திரத்தில் முதலாவது அத்தியாயத்தில் உலகம் தோன்றிய கதைகளும் நான்கு சாதிகள் தோன்றிய கதைகளும் கூறப்படுகின்றன. இரண்டாம் அத்தியாயத்தில் இந்து மக்களின் கல்வி முறைகள் பற்றிக் கூறப்படுகின்றன. மூன்றாம் அத்தியாயத்தில் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட ஒரு தலைவனும் தலைவியும் செய்ய வேண்டிய கிரியை முறைகள் பற்றிக் கூறப்படுகின்றன. நான்காம், ஐந்தாம், ஆறாம் அத்தியாயங்களில் வர்ணாச்சிரமக் கோட்பாடு பற்றி கூறப்படுகின்றது. ஏழாம் அத்தியாயம் முழுவதும் அரசியல் நிலை எடுத்துக் கூறப்படுகின்றது. அதில் அரசனுடைய கடமைகள், சட்டம், நீதி, நிர்வாகம் என்பன உள்ளன. எட்டாம் ஒன்பதாம் அத்தியாயங்களில் சமத்துவம் பற்றியும் பத்தாம் அத்தியாயத்தில் கலப்புத்திருமணம் பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றது. பதினோராம் பன்னிரெண்டாம் அத்தியாயங்களில் தத்துவக் கருத்துக்களும், குற்றம் செய்தவனுக்குரிய பிராயச் சித்தம் பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. மற்றும் தூய்மை, ஆண்மை சோர்வு ஆகிய குணங்களின் அடிப்படையில் மக்கள் பிரிக்கப்பட்டு இருந்தார்கள் எனவும் கூறப்படுகின்றது. சுருக்கமாகக் கூறுவதனால் மனு சாஸ்திரம் என்பது சமுதாயத்தை உருவாக்கும் கருத்துக்களையே எடுத்துக் கூறுகின்றது எனலாம்.

பொதுவாக தர்மசாஸ்திரங்கள் கூறுகின்ற சமுதாயக் கருத்துக்களை நோக்கும் போது வர்ண பாகுபாடு பற்றி எடுத்துக் காட்டப்படுகின்றது. சமூகத்தில் நான்கு வர்ணத்தவர்களாக பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என்போரையும் அவர்களுக்குரிய வாழ்க்கை நிலையாக பிரமச்சரியம் கிருகஸ்தம் வானப் பிரஸ்த்தம் சந்நியாசம் என்பவனவும் இடம் பெறுகின்றது. அவர்கள் ஒவ்வொரு வருக்குமுரிய கடமைகளாக பிராமணர்கள் வேள்வி யாகக் கிரியை செய்தலையும் சத்திரியனுடைய கடமையாக அரச தொழிலும் வைசியனுடைய கடமையாக பொருளாதார தொழிலும் சூத்திரருடைய தொழிலாக ஏனைய மூவருக்கும் (பிராமணர், சத்திரிய வைசியர்) ஏவல் சேவை புரிபவனாகவும் இருக்கின்றான் என்பது தர்மசாத்திரங்களில் எடுத்துக் காட்டப்படுகின்றது. எனவே தர்மசாஸ்திரங்கள் சமூகத்தில் தர்மத்தை எடுத்துக் காட்டுவதற்காக எழுந்த நூல் என்ற வகையில் ஏனைய சமய நூல்களிலிருந்து வேறு பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

> பசி எடுக்கும்போது நாம் சாப்பிடுகிறோம். ஆனால் பசி தீர்ந்தபிறகு நாம் சாப்பாட்டை மறந்து விடுகிறோம். 'பக்தி' என்பது அப்படிப்பட்டது அல்ல. நம்முடைய வாழ்க்கையில் தொடர்ந்து செய்து கொண்டு வரவேண்டிய பயிற்சி.
>
> *சுவாமி முக்தானந்தா*

இந்து சமயக் கருத்துக்களையும் சமுதாயக் கருத்துக்களையும் சிறப்பாக எடுத்துக்கூறும் நூலாக தர்ம சாஸ்திரங்கள் காணப்படுகின்றன. அதாவது மனச்சாட்சி நற்பழக்கவழக்கங்கள் ஞானியர்களுடைய அறிவுரைகள் என்பனவற்றை எடுத்துக் கூறுவதற்காக தர்மசாஸ்திரங்கள் தோன்றினாலும் அறம், பொருள் இன்பம் என்பனவற்றில் ஈடுபட்டவன் வீடுபேற்றினை அடைவான் எனவும் எடுத்துக் கூறப்படுகின்றது. சமயத்துக்கு வழிகாட்டும் நூலாக இது காணப்பட்டாலும் முழுவதும் சமுதாயக்கருத்துக்களையே எடுத்துக் கூறுகின்றது எனலாம். இதிலிருந்து சமயத்தோடும் சமூகத்தோடும் பின்னிப் பிணைந்த ஒரு நூலாகவே இது காணப்படுகின்றது என்பதில் ஐயமில்லை.

மேலும் சமூகத்தில் காணப்பட்ட மூடநம்பிக்கைகளான விதவைகள் மறுமணம் செய்யக்கூடாது என்னும் கருத்துக்களை தர்மசாஸ்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஆரம்பகாலத்திலே விதவைகள் மறு திருமணம் செய்யக் கூடாது என்ற நிலையும் சாதிக் கோட்பாட்டினால் திருமணங்களின் தன்மையும் இன்னும் பல மூடநம்பிக்கைகளும் சமூகத்தினிடையே காணப்பட்டன. எனவே இந்த மூடநம்பிக்கைகளை இல்லாமல் ஒழித்து மக்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக இந்நூல் ஏற்படுத்திய கருத்துக்கள் வியக்கத்தக்கதாகும்.

மேற்கூறிய மனுதர்ம சாஸ்திரங்களை விடமேலும் சில தர்மசாஸ்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம். ஞாஞ்ஞிய வல்லிய தர்மசாஸ்திரமானது நன்னடத்தைக் கோட்பாடுகள் அரசியல் குற்றவில் சட்டங்கள் பிராயச் சித்தங்கள் என்பவற்றையே கூறுகின்றது. அதாவது ஒரு மனிதன் வாழ்கின்ற சூழலில் சட்டங்கள் , நீதித்துறைகள் என்பன எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகின்றது. மனுதர்மசாஸ்திரத்துடன் ஒப்பிடும் போது இதில் குற்றவியல் சட்டங்களே கூடுதலாகக் கூறப்படு கின்றது எனலாம்.

மேலும் நாரதர் தர்மசாஸ்திரமும் பிரகஸ்பதி தர்மசாஸ்திரமும் விஞ்ஞான ரீதியிலே சட்டங்களை வகுத்துள்ளது எனலாம். நாரதர் தர்மசாஸ்திரம் சமயக் கருத்துக்களைவிட மனிதனுடைய ஒழுக்கத்துக்கு சிறப்பிடம் கொடுக்கின்றது. ஆனால் பிரகஸ்பதி தர்மசாஸ்திரம் இரண்டு விடயங்களைப் பற்றியே சிறப்பாகக் கூறுகின்றது எனலாம். உளவியல் ரீதியான சிந்தனைகளை மையமாகக் கொண்டு ஒழுக்கங்களே கூறப்படுகின்றது. மேலும் ஒருவனின் குற்ற விசாரணையை அதே இனத்தைச் சேர்ந்தவராலேயே விசாரிக்கப்பட வேண்டும் எனவும் எடுத்துக் காட்டுகின்றது. எனவே ஏனைய நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தர்மசாஸ்திரங்கள் இந்து சமய நூல்களிலே எத்தகைய சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது என்பதைக் காணமுடிகின்றது.

இறுதியாக சுக்கிரந்தி என்னும் நூலைப் பார்க்கும் போது (சுக்கிரர் என்னும் ஆசிரியரால் கி. பி 10 ம் நூற்றாண்டிலே உருவாக்கப்பட்டது) இந்நூலில் அறம் பொருள் இன்பம் என்பனவும் அரசனுக்குரிய கடமைகள் என்பனவும் கூறப்படுகின்றது. மேலும் இந்நூலில் ஒரு அரசன் எவ்வாறு செங்கோன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. இந்நூல் நான்கு அத்தியாயங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இதில் முதலாம் இரண்டாம் அத்தியாயங்களில் ஒரு அரசன் நாட்டில் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதில் செய்ய வேண்டியவை பற்றி கூறப்படுகின்றது. மூன்றாம் நான்காம் அத்தியாயங்களில் அரசன் சட்டங்களை எவ்வாறு இயற்ற வேண்டும் என்பது பற்றியும் மக்களுக்கும் அரசனுக்குமுள்ள தொடர்பும் எடுத்துக் காட்டப்படுகின்றது. அரசன் வெற்றி பெறுவதற்கு பின்பற்றும் இராஜதந்திரம் ஆகியவையும் அவன் செய்யக்கூடாத கருமங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆகவே சுக்கிரந்தி தர்மசாஸ்திரம் ஏனைய தர்மசாஸ்திரங்களைவிட அரசதர்மத்தை சிறப்பாக எடுத்துக் கூறுவதிலிருந்து ஏனைய இந்து சமய நூல்களிலிருந்து தர்மசாஸ்திரங்கள் வேறுபட்டு இருப்பதைக் காணலாம்.

எனவே மேற்கூறிய எல்லாவற்றையும் தொகுத்து நோக்கும் போது சமத்துவமான இந்து மக்களை உருவாக்கி சமயக்கருத்துக்களையும் சமுதாய ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்துவதை தமது நோக்கமாகக் கொண்டு இத்தர்ம சாஸ்திரங்கள் தோற்றம் பெற்றது எனவும், இதனாலேயே ஏனைய இந்து சமய நூல்களிலிருந்து தர்மசாஸ்திரம் என்னும் நூல் மிகச் சிறப்பிடம் பெறுகின்றது எனவும் கூறலாம்.

> இறைவன் அடியார்கள் பெற்றிருக்க வேண்டிய தகுதி, தாங்கள் இறைவனின் திருவடிக்கே உரியவர்கள் என்பதுதான். இந்த ஒரு தகுதியில் மற்ற அனைத்துத் தகுதிகளும் அடங்கியுள்ளன.
>
> - சுவாமி கமலாத்மானந்தர்

# புதுமைக்கும் வழிகாட்டிகளாகப் பண்டே நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்

## பண்டே போற்றப் பெற்ற தைந் நீராடல் இன்றும் போற்றப் பெற்று வருகின்றது

ஆ. குணநாயகம்

இந்நில உலகின் கண்ணே பல சமயங்கள் உள்ளன. பெரும்பாலான அவை ஒவ்வொன்றும் தற்பாதுகாப்பிற்காகவும் நிலை பேற்றிற்காகவும் முறையான நிருவாக ஒழுங்குகளைச் செய்துள்ளன. ஆனால் எமது சைவ சமயத்தைப் பொறுத்த மட்டில் அப்படியான கட்டுக் கோப்பான ஒழுங்கு முறை அமைந்துள்ளது எனச் சொல்ல முடியாது. யாவர்க்கும் ஏற்புடைத்தான நிருவாகத் தலைமைப் பீடம் இல்லை. சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஏதோ தாம் தாம் தெரிந்தவாறு தமது சமய வழிபாடுகளை நடாத்துகின்றனர். இந்நிலையில் சைவ சமயம் ஒருவாறு நிலைத்திருக்கிறது என்று சொன்னால், அது ஆங்காங்கே திருக்கோவில்கள் இருந்து வருதலினாலே எனக் கூறுதல் பிழையாகாது. இக்கோவில்களிலே பல்வேறு திருவிழாக்கள் காலத்திற்குக் காலம் நடைபெற்று வருகின்றன. இவ்விழாக்கள் அர்த்தமற்ற களியாட்ட வேடிக்கைகளன்று. இவை ஒவ்வொன்றும் தத்துவார்த்த உண்மைகளை விளக்குவன. அவற்றைச் சரியான முறைப்படி நடாத்த சைவ ஆகமங்கள் உள்ளன. எமது பெருமக்கள் இவ்விழாக்களைப் பண்டைக் காலம் தொட்டே போற்றி வந்திருக்கிறார்கள்.

ஒரு இனத்தின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதற்கு அவ்வினத்தின் இலக்கியங்கள் பெரிதும் உதவுமெனக் கூறுவர். தமிழ் இனத்தைப் பொறுத்த மட்டில் நூற்றுக் கணக்கான இலக்கியங்கள் அழிந்து போயின. தப்பிப் பிழைத்தது மிகச் சிலவே. இவற்றுள் காலத்தால் முந்தியவை சங்க நூல்களாகும். இச் சங்க நூல்கள் பெருபாலானவை தமிழினத்தின் வாழ்க்கை முறையில் உள்ள பண்பாட்டு அம்சங்களைக் குறிப்பிட்டனவேயன்றி இறையுணர்வு என்பது கூறப்படவில்லையென்றே கற்றறிந்தோர் சொல்கின்றனர். காலப்போக்கின் பிற்பகுதியிலேதான் இறையுணர்வு ஓங்கி மிளிர்கின்றது. இதனை நாம் சைவ நாயன்மார் காலத்திலே விளக்கமாக அறியவுள்ளது.

சங்க நூல்களைப் பொறுத்த மட்டில் புறநடையாக ஒரு நூல் இறையுணர்வில் திழைத்து விளங்குகின்றது. எட்டுத் தொகை நூல்களில் ஒரு இலக்கியமான இது "ஓங்கு பரிபாடல்" என்று சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளது.

*"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ*
*றொத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்*
*நித்திறத்த எட்டுத் தொகை".*

இந் நூல், திருமாலையும் செவ்வேளையும் ஒழுகலாற்றைக் கொண்ட வையைப் பேரியாற்றையும் வாழ்த்துதலாகு உட்பொருள் கொண்டு, இடையிடையே நம் தமிழகப் பண்பு, அன்பு, காதல், வீரம் ஆகிய திறங்களை விளக்கிச் செல்லும் பெருமை மிக்கது.

பழைய ஒரு வெண்பாவின் சான்றின்படி இந்நூல் எழுபது பாடல்களைக் கொண்டுள்ளது. ஆனால், எமக்கு இப்பொது கிடைத்துள்ளது 33 பாடல்கள் மாத்திரமே.

இந்நூலுக்கு உரை பரிமேலழகர் செய்துள்ளதாகக் கூறுவர். அது இப்போது இல்லை. இந்நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் என்ன பண்ணில் அமைந்துள்ளது, யார் ஆற்றியுள்ள பாடல், யாரின் இசை எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. இது ஏனைய, இலக்கியங்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பாகும். இதன் கண்ணே யுள்ள 11ம் பாடல் வையை நதியைப் போற்றுவதாக அமைந்துள்ளது. இது ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு, பண்ணுப் பாலையாழ், நாகனார் இசை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலிலேதான் ஆசிரியர் தைந் நீராடலைச் சிறப்பித்து விளக்கியுள்ளார்.

வையை நதியை விளித்துப் புலவர் கூறுகின்றார் :-

"வையை நதியே ! மழை காலத்தில் கலங்கி, வேனிற் காலத்தில் தெளிதலினாலே உனது தன்மை எப்போதும் ஒரு தன்மைத்தாய் இருப்பதில்லை. மழை காலத்தில் முகில்கள் முழங்கா நின்ற திசைகள் அதிர்வதற்குக் காரணமான, இடியொலி நீங்கா நிற்ப, பனி மிகுதலானே குளிரால் நடுங்குதலையுடைய முன் பனிப் பருவத்தின் கண், ஞாயிற்று மண்டியம் சுடுதலில்லாத, குளிர்ந்த கடை மாரியையுடைய மார்கழித் திங்களில், மிகப் பெரிய திங்கள் மண்டிலம் தன்னகத்துள்ள களங்கத்தோடே, வளர்ந்து நிறைந்த திருவாதிரை நாளின் கண், விரிந்த மெய்ந் நூல்களையுணர்ந்த அந்தணர்கள், அத்திருவாதிரைத் தெய்வமாகிய சிவபெருமானுக்குத் திருவிழாவைத் தொடங்கா நிற்ப, முப்புரியாகிய பூணூலையுடைய பார்ப்பணர் அவ்விழாவின் கண் இறைவனுக்குப் பலிப்பொருள் பெய்த பொற்கலங்களையும் பிறவற்றையும் ஏந்தா நிற்ப, அகன்ற இந்நிலவுலகம், ஞாயிற்றின் தெறுதலாலே வெப்பமுடைத்தாகாமல், மழையாலே குளிர்வதாக என்று வாழ்த்தி, அம்பா ஆடுதலையுடைய ஆராய்ந்திட்ட வளையலணிந்த கன்னிமைப் பருவத்து மகளிர், சடங்கறிந்த முத பார்பனியார், நோன்பு செய்யும் முறையினை அறிவிக்க, பனியையுடைய வைகறைப் பொழுதிலே நீராடி, பரிய மணலிலே, ஒழுகா நின்ற நீரின் கண்ணே குளிர் வாடை தவழ்ந்து வருதலாலே, வேத நெறியாலே வளர்க்கப்பட்ட வளைந்தெரியும் தீயினைப் பேணிச் சிறப்புடனே, ஒப்பனையையுடைய அக்கன்னி மகளிர் சென்று, அதன் கண் தம் ஈர ஆடையை உலர்த்தா நிற்ப வையையே! அத்தீயின் கண் கொடுக்கும் அவி நினக்கு வாய்ப்புடையதாயிருந்தது.

எழுத்துக்களைப் பொறித்த சுவடிகளைத் தாங்கிய இளம் புலவர்களது காமக் குறிப்புக்கு மாறாக, அக் கன்னி மகளிர் அவரவர் தாயர் அருகாமையில் நின்று நோன்புடைய இத் தைந்நீராடலை நின்னிடத்தே பெற்றது.

இங்ஙனம், நீர்க்கண் நின்றன்றி, எரியாநின்ற தீயின் பக்கத்திலே நின்று, பொறி புலன்களையடக்கி செய்தற்குரிய தவத்தினைப் பண்டைப் பிறப்புக்களினும் மேற்கொண்டு ஆற்றினமையாலோ? வையை நதியே ! இப் பேற்றிற்குரிய காரணத்தை நீயே கூறுவாயாக !"

இவ்வாறு தைந்நீராடல் பெரு விழாவினைப் புலவர் வையை நதியின் மேல் வைத்து மிக விமரிசையாகப் போற்றியிருக்கின்றார்கள். இவ்விழா திருவாதிரைத் திரு நாளிலேயே கொண்டாடப் பெற்றது. எமது இக்கால முறைப்படி, இத் திருநாள் மார்கழி மாதத்திற்கே உரியதொன்றாகக் கருதப்படுகின்றது. சம்பந்த மூர்த்தி நாயனாரும் தமது பூம்பாவைத் திருப்பதிகத்திலே திருவாதிரைப் பெருநாளை மார்கழி மாதத்திற்கு உரியதாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எவ்வாறாயினும், தைந்நீராடல் பெருவிழா, அன்றும் நடைபெற்றது. இன்றும் நடக்கின்றது.

# திருமலை பத்திரகாளியம்மா!



திருகோண மலையமர்ந்து திருவருளைத் தருபவளே
திசையெங்கும் உன் கருணை நீக்கமற நிறைந்திடவே
பார் போற்றும் தாயவளே தாள் பணிந்து துதிக்கின்றோம்.
பார்வையினை எம்மீது செலுத்திடுவாய் பத்திரகாளியம்மாவே.

கிழக்கிலங்கை எழுந்தருளி கிலேசமதை அறுப்பவளே
கிட்டி வரும் வேதனைகள் எட்டி எமை விலகிடவே
நத்தியுந்தன் அடி பணிந்து நாளெல்லாம் இறைஞ்சுகிறோம்
நாயகியே எம்மீது கருணை கொள்வாய் பத்திரகாளியம்மாவே.

ஞானமெல்லாம் நன்மை பெற அருளுகின்ற பேரருளே
ஞானம் நிறை நல்லறிவு புவியெங்கும் நிறைந்திடவே
தாயாக இருந்து எம்மை வழிநடத்த அழைக்கின்றோம்.
தரணியெங்கும் அமைதியுற வரமருள்வாய் பத்திரகாளியம்மாவே.

அன்பு நிறைபேரருளே அணைத்தருளும் திருமகளே
அல்லல் களைந்தெமது அமைதி நிலை நிலைத்திடவே
வல்லமை தந்தருளும் மாசில்லா அடிபணிகின்றோம்
வந்தெமது துயர் போக்கி வளமளிப்பாய் பத்திரகாளியம்மாவே

செழுமை மிகு திருமலையின் கடல் மருங்கில் அமர்ந்தவளே
செம்மை தரும் நல்வாழ்வு சீர்மை பெற்று நிலவிடவே
கருணை கொண்டு காட்சி தர வாவென்று கூவுகின்றோம்
காலமெல்லாம் நல்லவழி காட்டியருள் பத்திரகாளியம்மாவே

த. மனோகரன்
"உமாபதி"
கொழும்புத்துறை

*(திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ராஜகோபுர மகா கும்பாபிஷேகம் தைப்பூச திருநாளாகிய 2001 பெப்ரவரி 7ம் திகதி நடைபெற்றது.)*

# 2001

## அகில இலங்கை இ

### இலங்கை இந்துமன்ற

### ஆலய நம்பிக்கை பொறுப்பு

### ஜனவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### பெப்ரவரி

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

### மார்ச்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### ஏப்ரல்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### மே

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### யூன்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### யூலை

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### ஆகஸ்ட்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### செப்டம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### ஒக்டோபர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### நவம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### டிசம்பர்

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

- அரசாங்க விடுமுறை    + வங்கி விடுமுறை    * வர்த்தக விடுமுறை

### மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சமய வைபவங்கள்

**நடேசர் அபிஷேகம்**

*09. 01. 2001 (செவ்வாய்) திருவாதிரை*
*08. 03. 2001 (வியாழன்) சுக்கிலபட்ச சதுர்த்தசி*
*14. 05. 2001 (திங்கள்) திருவோணம்*
*27. 06. 2001 (புதன்) ஆனி உத்தரம்*
*01. 09. 2001 (சனி) சுக்கிலபட்ச சதுர்த்தசி*
*01. 10. 2001 (திங்கள்) சுக்கிலபட்ச சதுர்த்தசி*
*30. 12. 2001 (ஞாயிறு) திருவாதிரை*

**மாமன்ற தலைமையகத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு வருடாபிஷேகம்**

*07. 05. 2001 (திங்கட்கிழமை)*

**சமயகுரவர் குருபூசை தினங்கள்**

*19. 04. 2001 (வியாழன்) திருநாவுக்கரசு நாயனார்*
*07. 06. 2001 (வியாழன்) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்*
*25. 06. 2001 (திங்கள்) மாணிக்கவாசக சுவாமிகள்*
*28. 07. 2001 (சனி) சுந்தர மூர்த்தி நாயனார்*

**நினைவு தினங்கள்**

*19. 07. 2001 (வியாழன்) சுவாமி விபுலானந்தர் நினைவு தினம்*
*05. 12. 2001 (புதன்) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தினம்*

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

### தமிழ்ப் புதுவருடப் பிறப்பு

*சித்திரை தமிழ்ப் புதுவருடம் 2001 ஏப்ரல் மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை வாக்கிய பஞ்சாங்கப்படி இரவு 9 மணி 57 நிமிடத்திலும், திருக்கணித பஞ்சாங்கப்படி நள்ளிரவு 12 மணி 13 நிமிடத்திலும் பிறக்கிறது. (இவை இப்பொழுது நடைமுறையிலிருக்கும் மாற்றத்திற்குரிய நேரப்படியாகும்).*

*பிறக்கவிருக்கும் புதுவருடத்தின் பெயர் விஷு என்பதாகும். மொத்தமாகவுள்ள அறுபது வருடங்களின் சுற்று வட்டத் தொடரில் இது 15 வது வருடமாகும்.*

# ் இந்து மாமன்றம்

ற அமைப்புகளினதும்
ப்புகளினதும் கூட்டமைப்பு.

# 2001

## இந்துக்களின் விசேட தினங்களும் விரத நாட்களும்

### ஜனவரி

06 - வைகுண்ட ஏகாதசி, கார்த்திகை
07 - பிரதோஷம்
09 - திருவெம்பாவை நிறைவு, பூரணை
13 - சங்கடஹர சதுர்த்தி
14 - தைப்பொங்கல்
20 - ஏகாதசி
21 - பிரதோஷம்
24 - அமாவாசை
28 - சதுர்த்தி
30 - சஷ்டி

### பெப்ரவரி

02 - கார்த்திகை
04 - ஏகாதசி
06 - பிரதோஷம்
07 - தைப்பூசம், பூரணை
11 - சங்கடஹர சதுர்த்தி
18 - ஏகாதசி
20 - பிரதோஷம்
21 - மகா சிவராத்திரி
22 - அமாவாசை
27 - சதுர்த்தி

### மார்ச்

01 - கார்த்திகை, சஷ்டி
06 - ஏகாதசி
07 - பிரதோஷம்
09 - பூரணை
13 - சங்கடஹர சதுர்த்தி
19 - முதலாம் பங்குனித் திங்கள்
20 - ஏகாதசி
22 - பிரதோஷம்
24 - அமாவாசை
29 - கார்த்திகை
30 - சஷ்டி

### ஏப்ரல்

04 - ஏகாதசி
05 - பிரதோஷம்
06 - பங்குனி உத்தரம்
07 - பூரணை
09 - கடைசி பங்குனித் திங்கள்
11 - சங்கடஹர சதுர்த்தி
14 - விஷு வருடப் பிறப்பு
19 - ஏகாதசி
21 - சனிப் பிரதோஷம்
23 - அமாவாசை
25 - கார்த்திகை
27 - சதுர்த்தி
29 - சஷ்டி

### மே

03 - ஏகாதசி
05 - சனிப் பிரதோஷம்
07 - சித்திரா பௌர்ணமி, சித்திரகுப்தவிரதம்
11 - சங்கடஹர சதுர்த்தி
19 - ஏகாதசி
20 - பிரதோஷம்
22 - அமாவாசை, கார்த்திகை
26 - சதுர்த்தி
28 - சஷ்டி

### ஜூன்

02 - ஏகாதசி
05 - பூரணை
09 - சங்கடஹர சதுர்த்தி
17 - ஏகாதசி
19 - பிரதோஷம், கார்த்திகை
21 - அமாவாசை
24 - சதுர்த்தி
26 - சஷ்டி
28 - ஆனி உத்தரம்

### ஜூலை

01 - ஏகாதசி
03 - பிரதோஷம்
05 - பூரணை
09 - சங்கடஹர சதுர்த்தி
12 - சஷ்டி
16 - கார்த்திகை
17 - ஆடிப்பிறப்பு
18 - பிரதோஷம்
20 - ஆடி அமாவாசை
24 - ஆடிப் பூரம், நாக சதுர்த்தி
26 - சஷ்டி
31 - ஏகாதசி

### ஆகஸ்ட்

01 - பிரதோஷம்
08 - சங்கடஹர சதுர்த்தி
12 - கார்த்திகை
15 - ஏகாதசி
16 - பிரதோஷம்
18 - அமாவாசை
19 - முதலாம் ஆவணி ஞாயிறு
22 - விநாயக சதுர்த்தி
24 - சஷ்டி
28 - ஆவணி மூலம்
29 - ஏகாதசி
31 - பிரதோஷம், ஆவணி ஓணம்

### செப்டெம்பர்

02 - பூரணை
09 - கார்த்திகை
13 - ஏகாதசி
15 - சனிப் பிரதோஷம்
16 - கடைசி ஆவணி ஞாயிறு
17 - அமாவாசை
20 - சதுர்த்தி
22 - சஷ்டி, முதலாம் புரட்டாதி சனி
28 - ஏகாதசி
29 - சனிப் பிரதோஷம்

### ஒக்டோபர்

02 - பூரணை
06 - கார்த்திகை
13 - ஏகாதசி, கடைசிப் புரட்டாதி சனி
14 - பிரதோஷம்
16 - அமாவாசை
17 - நவராத்திரி ஆரம்பம்
19 - முதலாம் ஐப்பசி வெள்ளி
20 - சதுர்த்தி
22 - சஷ்டி
25 - சரஸ்வதி பூஜை, கேதார கௌரி விரதாரம்பம்
26 - விஜய தசமி
27 - ஏகாதசி
31 - பூரணை

### நவம்பர்

01 - கார்த்திகை
11 - ஏகாதசி
12 - பிரதோஷம்
14 - தீபாவளி, அமாவாசை, கேதார கௌரி விரதம் முடிவு
16 - கந்தசஷ்டி விரதாரம்பம்
18 - சதுர்த்தி
19 - முதலாம் கார்த்திகை சோமவாரம்
21 - கந்தசஷ்டி விரதம் முடிவு
26 - ஏகாதசி
28 - பிரதோஷம்
30 - பூரணை, திருக்கார்த்திகை, குமாராலய தீபம்.

### டிசம்பர்

01 - விநாயக விரதாரம்பம்
10 - கடைசி கார்த்திகை சோமவாரம்
11 - ஏகாதசி
12 - பிரதோஷம்
14 - அமாவாசை
18 - சதுர்த்தி
20 - விநாயக சஷ்டி
21 - திருவெம்பாவை பூஜாரம்பம்
26 - வைகுண்ட ஏகாதசி
27 - கார்த்திகை
28 - பிரதோஷம்
30 - பூரணை, திருவெம்பாவை நிறைவு

# குப்தர் கால இந்து மறுமலர்ச்சி

*திருமதி. உ. சுரேந்திரகுமார்*
*யா/ கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.*

வட இந்திய வரலாற்றில் குப்தர் காலம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. குப்த மன்னர்களது ஆட்சி கிட்டத்தட்ட கி. பி. 320 அளவில் தொடங்கி இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

பொதுவாக இக்காலப் பகுதியினை வரலாற்று ஆசியர்கள் ஏற்றுக்கொள்வர். இவ் வமிசத்தில் குறிப்பிடத் தக்கவர்கள் முதலாம் சந்திரகுப்தன், குமார குப்தன், ஸ்கந்தகுப்தன் போன்றவர்கள் ஆவர். இம் மன்னர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததுடன் இந்து மதத்தின் வளர்ச்சிக்குப் பெரும் தொண்டு ஆற்றினர். இதன் காரணமாக இந்து மதம் தனது பழைய நிலையைப் பெறமுடிந்தது.

மன்னர்களின் ஆதரவு மத வளர்ச்சிக்கோ பண்பாட்டு வளர்ச்சிக்கோ முக்கியமான காரணம் என்பதினால் குப்தர் காலப் பகுதியில் ஏற்பட்ட இந்து மத மறுமலர்ச்சிக்கும் மன்னர்களே முக்கிய காரணமாக விளங்கினர்.

குப்த மன்னர்கள் பல சமய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவர்கள் கோயில்க ள் பலவற்றைக் கட்டு வித்ததுடன் சமய நிறுவனங்கள் பலவற்றுக்கும் தானங்களை வழங்கினர். சமூகத்தில் சிறப்புற்றிருந்து சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டோரை மன்னர்கள் ஆதரித்தனர். இத்தகைய நடவடிக்கையினால் குப்த மன்னர்கள் சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றினர்.

இவர்களினால் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள், நாணயங்களில் இருந்தும் இவர்களது சமய ஈடுபாட்டினை அறிந்து கொள்ள முடிகிறது. இக்காலப் பகுதியில் சமணம், பௌத்தம் போன்ற பிற மதங்கள் இருந்த நிலையினைக் கொண்டும் இந்து மதத்தின் செல்வாக்கினை அறிந்து கொள்ளலாம். சமண, பௌத்த மதங்கள் செல்வாக்கை இழந்திருந்தது. சைவ, வைஷ்ணவ மதங்களுடன் எதிர்த்துப் போராடக்கூடிய நிலையிலும் விளங்கவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் சமண, பௌத்த மதங்களுக்கு மன்னர்களின் ஆதரவு கிட்டாமையே ஆகும். இந் நிலையில் இந்து மதம் வளர்ச்சியடையத் தொடங்கியதுடன் பிராமணர்களும் மீண்டும் தமது செல்வாக்கினை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

வேத காலப் பகுதிகளில் பெருமதிப்புப் பெற்றிருந்த பிராமணர்கள் மௌரிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் – குறிப்பாக அசோகனது காலத்தில் – தமது செல்வாக்கை இழந்தனர். யாகக் கிரிகைகளும் அற்றுப் போயின. அசோகன் பௌத்தத்தைப் பின்பற்றி அதனை அரச மதமாக்கியமையால் பெரும்பாலான மக்கள் பௌத்தத்தைப் பின்பற்றத் தொடங்கினர். இந்நிலையில் மன்னர்களின் ஆதரவின்றி இந்து மதம் வீழ்ச்சியடைந்தது. சமயச் சடங்குகளும் கிரியைகளும் தளர்வடையத் தொடங்கின. ஆனால் குப்தர் காலப் பகுதியில் குப்த மன்னர்கள் இந்துக்களாக இருந்தமையால் இக்காலப்பகுதியில் இந்து மதம் மலர்ச்சியடையத் தொடங்கியது. கிரியைகளும் சடங்குகளும் சமயத்தில் முக்கியத்துவம் பெற்றன. பிராமணரும் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றனர்.

குப்தர் காலப் பகுதியில் பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்ற கடவுளரை அடிப்படையாகக் கொண்ட திரிமூர்த்திக் கொள்கை வளர்ச்சியடைந்திருந்தது. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களை அடிப்படையாகக் கொண்ட தத்துவக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. மும் மூர்த்திக் கொள்கை வலுப்பெறவே அவற்றை அடிப்படையாகக் கொண்ட புராணக் கதைகளும் தோற்றம் பெற்றன. இப்புராணங்களில் உலகப் படைப்புக்கள், கடவுள் பற்றிய குறிப்புக்கள், போர் வீரர், சமயத் துறவிகள், மனனர்களின் வம்சாவழி வழிபாட்டு முறைகள், விரத அனுட்டானங்கள், கிரிகைகள் பற்றிய விளக்கங்கள் ஆகியன கூறப்பட்டுள்ளன. திரி மூர்த்திகளில் விஷ்ணு பற்றிய கதைகள் பெருமளவுக்குக் காணப்படுகின்றன. சைவ, வைஷ்ணவ மதங்களை ஆதரிப்பவர்களாக மன்னர்கள் விளங்கினாலும் வைஷ்ணவம் கூடிய செல்வாக்கைப் பெற்றது.

இக்கால சமய நடவடிக்கைகளில் முக்கியம் பெற்றது அவதாரக் கோட்பாடாகும். அதர்மத்தின் பிடியில் இருந்து உலகத்தைக் காப்பதற்கும் தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் விஷ்ணு காலத்துக்குக் காலம் அவதாரம் எடுத்ததாகக் கூறப்படுகிறது. அவதாரக் கோட்பாடு பற்றி கீதை தெளிவாகக் கூறுகிறது. புராணங்கள் விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் சிறப்பித்துக் கூறுகின்றன. வைதீக மதம் சார்ந்த கதைகளைக் கொண்டுள்ள நூல்கள் பல தோற்றம் பெற்றன. குமார சம்பவம், ரகு வம்சம் போன்ற பல நூல்கள் இக்காலப் பகுதியில் தோற்றம் பெற்றன.

குப்த மன்னர்களில் முதலாம் சந்திரகுப்தனது சமய நடவடிக்கை பற்றி அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும், இத்தகைய நிலையில் குப்த மன்னர்களது சமய நடவடிக்கையை அவதானிக்கும் போது சமுத்திர குப்தனது ஆட்சி முக்கியத்தும் பெறுகிறது. இவன் பிராமணர்களை ஆதரிப்பதற்காக அவர்களது சமய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக ஆயிரக் கணக்கான பசுக்களைப் பிராமணருக்குத் தானமாக வழங்கினான் என்று கூறப்படுகிறது. அவன் தானமாகக் கொடுத்த பசுக்களின் எண்ணிக்கை எவ்வாறு இருப்பினும் பெருந்தொகையான பசுக்களைத் தானமாகக் கொடுத்தான் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து நீக்கப்பட்டு இருந்த அசுவமேத யாகத்தை மீண்டும் நடாத்துவித்தான். இதன் மூலம் கிரிகைகளுக்கும் சமயச்சடங்குகளுக்கும் ஆதரவு கொடுத்தான் எனக் கூறலாம். ஒரு சமய ரீதியான நடவடிக்கையாக பிராமணமதத்தை ஆதரித்து அதன் பிரதான அம்சமான யாகத்தைச் செய்தவன் என்ற வகையில் சிறப்புப் பெறுகிறான். அலகபாத் கல்வெட்டில் இவன் பூமியில் அவதரித்த கடவுளின் பிரதிநிதியாகக் கூறப்பட்டுள்ளான். இக்கூற்றில் இருந்து குப்தர் காலப் பகுதியில் அவதாரதத்துவம் ஏற்படுத்திய தாக்கத்தை அறிந்து கொள்ளமுடிகிறது.

இவனுக்கு பின் ஆட்சி செய்த இரண்டாம் சந்திரகுப்தன் பரமபாகவத என்ற விருதுப் பெயரைப், பெற்று இருந்தான். அவனுக்குப் பின், ஆட்சி செய்த குமாரகுப்தன், சமுத்திரகுப்தனைப் போன்று பல அசுவமேத யாகங்களைச் செய்து வந்தவனாகக் காணப்படுகிறான். இவனால் பொறிக்கப்பட்ட நாணயங்கள் பலவற்றுள் கார்த்திகேயக் கடவுள் மயில் மீது செல்வது போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. குமார குப்தனை அடுத்து ஸ்கந்தகுப்தன் ஆட்சியை நோக்கினால் இவன் சிறந்த சைவ மதப் பற்றுடையவனாக விளங்கினான். இவ்வாறு குப்த மன்னர்கள் இந்து மத ஆதரவாளர்களாக இருந்து மதத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியமையால் இக்காலப் பகுதியில் இந்து மதம் வளர்ச்சியடைய முடிந்தது.



# கந்தபுராணம்

புலவர் அ. திருநாவுக்கரசு

*மாயையின் வலியோனாகி மான்முத லோரை வென்றே*
*ஆயிரத் தோரெட்டண்டம் அரசுசெய் துகநூற்றெட்டுக்*
*கயமதழிவின் றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த*
*தீய சூர் முதலைச் செற்ற குமரன்றாள் சென்னிவைப்பாம்.*

நவில் தொறும் நூல் நயந்தனையும் பயில் தொறும் பண்பையும் பக்தி ஊற்றினையும் பரப்ப வல்லது நம்மனோர்க்கு கச்சியப்ப சிவாச்சாரியார் நயந்தளித்த கந்தபுராணமெனும் தெய்கவீகத் திருநூல். இந்நூலோ ஒப்புயர்வற்ற நூலெனப் போற்றிப் புகழ்ந்துரைக்கத்தகு மேலாம் பெரு நூல்கள் திருத்தொண்டர் பெரியபுராணமும் திருவிளையாடல் புராணமுமாம். கந்தபுராணமெனும் கலியுக வரதன் சூரபதுமன் கதை சொல்லும் நூல். தன்னகத்தே உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மயேந்திர காண்டம் , யுத்த காண்டம், வேத காண்டம், சூச(ஷ) காண்டம் என அறுவகையாகப் பாகம் பண்ணப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படை பரிபாடல் போன்ற சங்க இலக்கிய பக்தி நூல்களில், முருகப் பெருமான் சேயோனென அழைக்கப்படுதலும் அவர் தம் விளையாடல்கள் கூறப்படுவதையும் உற்று நோக்கின், அவன் குறிஞ்சிநிலக் கடவுளென்பது புலனாகும்.

இத்தகு சேயோன், கந்தன், கடம்பன், முருகன் குகன், ஞானப்பண்டிதன், ஆறுமுகன் எனப் பல பெயர்களால் அழைத்திடும் வடிவேலனர்க்கும் சிவபூசையில் சிறந்தொளிர் தரும் சூரபதுமனார்க்கும் இடையே நிகழப் பெற்ற கதை பேச வந்ததே கந்தபுராணமெனுஞ் செந்நூல். முருகப் பெருமானார்க்கும் சூரபதுமனார்க்கும் இடையே நிகழ்ந்தவற்றை உலகோர்க்குணர்த்தும் பாங்கில் கரைகடந்த கற்பனை வளத்தைப் பிசைந்து நெகிழ்வித்து உயரிய தத்துவங்களையும் உண்மைகளையும் உணர்த்த முந்துகின்றார் கச்சியப்பர். கடவுள் உண்மைகளையும் உயரிய கருவூலங்களையும் உணர்வதற்காற்றலற்ற மக்கட் கூட்டம் இலகுவில் உணரவேண்டி மக்கள் நாளுமறியும் பொருளைக் காட்டி நயமுடைய கற்பனையால் தெளிவுறுத்த விரைகின்றார் நூலாசிரியர். முருகப் பெருமான் நல்ல சேனாதிபதியாகவும் வீரம் செறிந்த போர் வீரனாகவும் காட்சி தருகின்றார். உலகிற்கே இறையாய் மிளிர்பவன் யாருடன் பொருதுவதென்பது வினா? இறைவனால் செயத்தகுவனவற்றைச் செய்யவியலாத ஒரு தலைவனைத் தேடுகின்றார். அத்தலைவனே சூரபதுமனுள்ளிட்டோராவர். ஆசை அதிகாரம் பொய் களவு காம இச்சை போன்ற இன்னோரன்ன காரணிகளை உலகம் வெறுத்து அன்பு, ஆதரவு, அமைதி, பொறுமை, உண்மை, நேர்மைவழி நிற்றல், உலகுய்ய வழியென ஓம்பப்படுகின்றது. இம்மையக் கருத்தை முன்னெடுத்து மொழிவதற்கு சூரபதுமன் பாத்திரமாய்ப் படைக்கப்படுகின்றான். அடாதன செய்தோர் ஈற்றில் அவலப்பட்டழிவது திண்ணமென்னும் உண்மையை உலகிற்குணர்த்துகின்ற கதை சூரன் கதை. நல்லனவற்றையும் தீயனவற்றையும் ஒப்பு நோக்கி உணர நினைவுறுத்துவனவே பெருவினாக்கள். இவ் அடிப்படையில் அமைந்த பெருவிழாவே தீபாவளியென்னுந் திருவிழா. இப் பெருவிழா காலங்களில் உலகம் பழைய நிகழ்வுகளைத் திரும்பிப் பார்த்து நேரில் புதிய பாதையை நெறிப்படுத்தத் துணிவு கொள்கின்றது. முருகனுக்கும் சூரபதுமனுக்கும் இடையில் நிகழ்ந்தன அறத்திற்கும் மறத்திற்கும் நிகழ்ந்த போரெனக் கொள்வது மிகையன்று.

இக் கதாபாத்திரங்களின் உண்மை தெளியாத, பொதிந்துள்ள தத்துவங்களையறியாத உலகம் தத்தளித்துத் தடுமாறுகின்றது. இனிய உளவாக இன்னாதவை போற்றி இடர்படுகின்றது. கதை வாயிலாக உலகிற்குரிய செம்பொருள் காட்டிநிற்குங் கந்தபுராணத்தைக் கசடறக் கற்றுய்வோம்.


## 2001ம் ஆண்டு ஏப்பிரல் 24 ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை மொறிஷியஸ் நாட்டில் நடக்கவிருக்கும் ஸ்கந்தமுருகன் தலைப்பிலான இரண்டாவது சர்வதேச மாநாடு.

ஸ்கந்த முருகன் தலைப்பிலான இரண்டாவது சர்வதேச மாநாடு 2001ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24ம் திகதி தொடக்கம் 28ந்திகதி வரை மொறிஷியஸ் நாட்டின் மொக்காவிலுள்ள மகாத்மா காந்தி கல்வி நிலைய வளாகத்தில் நடைபெறுமென ஸ்கந்த முருகன் பற்றிய ஆய்வுக்கான சர்வதேச மையத்தின் தலைவர் என்ற முறையில் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீங்கள் இந்த மாநாட்டில் ஒரு பேராளராகப் பங்குபற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தால் பெருமகிழ்ச்சியடைவேன்.

மாநாட்டில் பங்கு கொள்வோர் முன் கூட்டியே தங்களைப் பதிவு செய்து கொண்டால் தங்குமிடம் சாப்பாடு போக்குவரத்து போன்ற வசதிகளை ஒழுங்கு செய்வது இலகுவாக இருக்கும்.

நீங்கள் சமர்ப்பிக்கவிருக்கும் ஆராய்ச்சியின் தன்மையை ஒருபக்கத்திலோ அல்லது இரண்டு பக்கங்களிலோ சுருக்கமாக எழுதி உங்களுடைய சுயவிபரங்களுடன் 2001 ஜனவரி முதல் வாரத்திற்கு முன் எமக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

உங்கள் ஆராய்ச்சிக்கட்டுரை 2001 பெப்ரவரி 28 ந்திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதில் அடக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிக்கான துறைகளின் அடிப்படையில் நீங்கள் எடுத்துக் கொண்ட விடயத்தை பாண்டித்தியமான முறையில் கையாளுதலை கட்டுரைகளைப் பரிசீலனை செய்யும் குழுவினர் விரும்புவார்கள்.

மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உங்கள் உற்சாகமான ஒத்துழைப்பை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

Institue of Asian Studies
Chemmancherry, Shouliganallur
Chennai - 600119 India
Tel : 091-44-496-1662
Fax : 091-44-496-0959
Web site : http :// xlweb. com/heritage

நல்லாசிகளுடன்
உங்கள் உண்மையான
கலாநிதி ஜி. ஜோன் சாமுவேல்
தலைவர், சர்வதேச ஸ்கந்த முருகன் ஆய்வுமையம்.

# பாசுரந் தந்த பண்பாளர்

தமிழ் நாட்டின் சிறப்பு மிகு பகுதியாக விளங்குவது சோழ நாடு. இந் நாட்டின் திலகமாக விளங்குவது சீர்காழிப்பதியாகும். இவ்வூரின் கண்தோன்றிய சிவபாத விருதயர் என்ற அந்தண சீலர் பகவதியாரெனும் பெண்ணின் நல்லாரை மணந்து வேதநெறியிலும் மிகு சைவத்துறையிலும் வகுக்கப்பட்டுள்ள ஒழுக்கத்தில் சிறிதும் பிறழாது இல்லறத்தைச் செம்மையாய் இயற்றிவந்தனர்.

புத்திரப் பேறின்மையால் இருவரும் சிவபிரானை நோக்கித் தவமிருந்து அப்போது தமிழ் நாட்டில் வேரூன்றியிருந்த சமணம், பௌத்தம் என்ற புறப்புறச் சமயங்களை யொழித்துச் சைவத்தை நிலைநாட்டவல்ல சமயாசாரியர்கள் தோன்ற வேண்டுமென வேண்டிக் கொண்டனர்.

அவர்கள் தம் தவத்திற்கு வந்து இறைவன் அருள் சுரக்கப் பகவதியார் ஒளி பொருந்திய அழகு நிறைந்த ஆண் குழந்தையைப் பெற்றுமுகந்தார். இவ்வாண் குழந்தையே தேவாரத் திருமுறை முதல் மூன்றையுந் திருவாய் மலர்ந்தருளிய அருள்மிகு திருஞானசம்பந்த மூர்த்தி களாவார். சுவாமிகள் அவதார புருடராவர். முற்பிறவியில் பக்குவராய் பிறவாத்தன்மையை எய்தியிருந்தார். புறப்புறச் சமயங்களான சமணம், புத்தம் ஆகிய கானல் நீர் போன்ற சமயக் கொள்கைகளை ஒழித்துச் சைவ நெறியினை நிலைநாட்டுவதற்காகவே மேலும் பிறவியெடுக்கச் சிவபிரானால் மீண்டுந் தோற்றிவிக்கப்பட்டார். இச் செய்திதனைச் சுவாமிகள் அருளிய திருத்துருத்திப் பதிகத்தின் 5ம் பாடலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

*"துறக்குமா சொலப்படாய் துருத்தியாய்த் திருந்தடி*
*டிறக்குமா றிலாத என்னை மையல் செய்திம் மண்ணின் மேல்*
*பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்*
*டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்றதென்னையே"*

சமணத் துறவிகளின் ஊடுருவல் பாண்டி நாட்டைத்தான் மிகவும் பாதித்தது. நாவுக்கரசரும் சம்பந்தரும் இணைந்து தலயாத்திரை தொடங்கிப் பல தலங்களை வணங்கிப் பின்பு இருவரும் திருமறைக்காடு சென்று சில நாட்கள் அங்கு தங்கியிருந்தனர்.

இருந்தவேளையில் பாண்டிநாட்டிலிருந்து மங்கையற் கரசியாரால் அனுப்பப்பட்ட சிவனடியார்கள் வருகைதந்து திருஞானசம்பந்த சுவாமிகளை வணங்கி "ஐயனே எங்கள் நாட்டில் சைவம் மறைந்துவிட்டது, சமண சமயமே விளங்குகின்றது. மன்னனும் அச்சமயத்தில் புகுந்து சைவத்திற்குக் கேடுவிளைவிக்கின்றான். மங்கையற் கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் உளம் புழுங்கிச் சைவத்திற் குற்ற குறையை நினைந்து வருந்துகிறார்கள், தங்கள் நல்வருகையை வேண்டி நிற்கின்றார்கள், தாங்களே சமண சமயத்தை வென்று மீண்டும் சைவத்தை நிலைநாட்ட வல்லவரெனத் திண்ணமாய் நம்புகின்றார்கள். தாங்கள் பாண்டிநாட்டிற் கெழுந்தருளி எங்களைக் காத்தருள வேண்டும் " என்று மிகப் பணிவுடன் கூறினார்கள்.

பாண்டி நாட்டிலிருந்து மங்கையர்க்கரசியார் விடுத்த அழைப்பிற்கிணங்கிச் சுவாமிகள் புறப்பட்டபோது "நாளுங் கோளும் நன்றாயமையவில்லை" என நாவுக்கரசர் தடுக்கச் சம்பந்தர் கோளறு பதிகம் பாடி நாவுக்கரசரிடமிருந்து விடைபெற்றுப் புறப்படலானார்.

சம்பந்த சுவாமிகள் மதுரையை அடைந்து ஓர் மடத்தில் தங்கியிருக்கச் சமணர்கள் அம்மடத்திற்குத் தீ மூட்டவே அஃதினையறிந்த சம்பந்தர்

"செய்யனே திருவாலவாய்" என்ற பதிகத்தைப் பாடினார். உடனே திருமடத்தில் மூட்டிய தீ அணைந்து வெப்பு நோயாக (சுரம்) மாறிப் பாண்டிய மன்னனைத் துன்புறுத்தியது. அவ்வெப்பு நோயினைத் தாங்கப் பொறாத அரசன் பல வைத்தியர்களையும் சமண மந்திரவாதிகளையுங் கொண்டு சிகிச்சை செய்வித்தும் நோய் சிறிதுங் குறையாதமை கண்ட மன்னன் தனதரசியாரையும் மந்திரி குலச்சிறையாரையும் வரவழைத்து விசாரித்தான்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தங்கிய மடத்திற்கு இட்ட தீயினால்தான் இவ் வெப்பு நோய் சூழ்ந்த தென்றும் சம்பந்த சுவாமிகளே இந்நோயைத் தீர்க்கவல்லாரெனவுங் கூறினர். மன்னன் அவர்கள் கூறிய உண்மையை உணர்ந்தனன். மன்னன் அங்கு கூடியிருந்த சமணர்களை விளித்து "யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கம் சார்வன்" எனக் கூறிச் சுவாமிகளை அழைத்து வருமாறு அமைச்சருக்கு ஆணையிட்டான். பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்க அம்மன்னனின் வேண்டுகோளிற்கமைய இணங்கி சுவாமிகள் அரண்மனையையடைந்து திருநீற்றுப் பதிகம் பாடி அவனுக்குத் திருநீறு பூசி வெப்பு நோயைத் தணிவித்தார்.

சமணர்கள் தீயிலும் நீரிலும் வாதம் செய்து வெல்ல எண்ணினார்கள். சுவாமிகள் "உங்கள் வாய்மை பேசுமின்கள்"

என்று வாதுக்கழைத்தார். சமணர்கள் "தர்க்கம் வேண்டாம், கண்ணிற்குப் புலனாகும் வாதத்தால் வெல்வோம்" என்று கூறித் தத்தம் சமய உண்மையை ஏட்டில் எழுதித் தீயிலிட்டு பச்சைப் பசேலென உள்ள ஏடு வென்றதெனவும் எரிந்து சாம்பலான ஏடு தோற்றதாகவுங் கொள்வோமென்றனர். சுவாமி அவர்களும் இதற்குடன் பட்டார்.

சுவாமிகள் சமணருடன் அனல்வாதம் செய்து "போகமார்ந்த பூண்முலையாள்" என்ற திருநள்ளாற்றுப் பதிகத்தை அனலிலிட்டு "தளிரிள வளரொளி" என்ற பதிகம் பாடி அனலிலிட்ட ஏட்டை வேகாதிருக்கச் செய்தார். சமணர்கள் தம் பொருளமைந்த ஏட்டைத் தீயிலிட்டனர், அது எரிந்து சாம்பராயிற்று. இதைக் கண்ணுற்ற சமணர்கள் "இருமுறை போதாது மூன்றாம் முறை வாது செய்தல் வேண்டும்" என்றனர். சுவாமிகள் "இனி எத்தகைய வாது செய்திடல் வேண்டு மென்றனர்".

தத்தம் சமய உண்மைகள் எழுதப்பெற்ற ஏடுகளை ஆற்றில் விட்டால் நீரோட்டத்துடனோடுவது தோற்றதெனவும் நீரை எதிர்த்தோடுவது வென்றதெனவுங் கொள்வோ மென்றனர்.

சுவாமிகள் புனல் வாதத்தின்போது திருப்பாசுர மென்னும் பதிகம் பாடி ஏடு எதிர்செல்லுமாறு செய்தார். சமணர் விட்ட ஏடு ஆற்றோட்டத்தோடு விரைந்து கடலினுள் சென்றது. அரசன் சமணர்கள் முன்னமே ஒப்புக் கொண்டபடி கழுவேற்றி முறை செய்கவென அமைச்சர்க்குக் கட்டளையிட்டான். மடத்தில் தீ மூட்டிய சமணர்கள் கழுவேறினர். திருஞானசம்பந்தப் பெருமான் மன்னர்க்குத் திருநீறு வழங்க அதனைப் பக்குவமாய்ப் பணிந்தேற்று அணிந்து மகிழ்ந்தான். "வேந்தனுமோங்குக" என்றளவில் மன்னன் தன் கூனும் நிமிர்ந்தது. நாட்டிலுள்ளோர் அனைவரும் திருநீற்றினை அணிந்து மகிழ்ந்து இன்புற்றுச் சைவம் தழுவினர்.

பாண்டிய நாட்டில் சமணரை வென்று சைவத்தை நிலைநாட்டாதிருந்திருப்பின் "நீறெங்கே, மாமறைநூல் தானெங்கே எந்தை பிரான் ஐந்தெழுத்தெங்கே" என்ற வினாக்களுக்கு இல்லை யென்னும் விடையே எஞ்சி நிற்கும். எனவே சுவாமிகள் எம் சைவ சமயத்திற்குக் "காலத்தால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிதெனின்" மிகையன்று.

திருப்பாசுர விளக்கம் எனும் பெயரிய இந்நூல் திருப்பாசுரத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பாகக் காலஞ்சென்ற சைவப்பெரியர் ஏ.விஸ்வநாதபிள்ளை C.C.S. அவர்களால் அருமையாக எழுதப்பெற்றுள்ளது. பதிகத்திலுள்ள 12 பாடல்களும் சிறப்பாகவுந் தெளிவாகவும் மொழி பெயர்த்தெழுதப் பெற்றுள்ளன. சைவப்பெரியார் சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி ஆவார்.

இவ்வரிய நூல் 12 பாடல்களையும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் சேக்கிழார் பெருமானின் விளக்கவுரையாகவுள்ள வார்த்திகப் பனுவல்களையும் ஒழிபியல் (சேர்க்கை) பகுதியையும் அடக்கியுள்ளது.

முதல் பதிகம் வேண்டுதல் மற்றும் வாழ்த்துப் பாடலாகவும் (Beneadictory) அமைந்துள்ளது. அந்தணரும் வானவர்களும் ஆனினமும் வேந்தனும் மேலோங்கவும் தீமைகளற்றுப் போகவும் கால மழை தவறாது பொழிய வேண்டும் என்றும் அயல் நெறி வீழ்க வென்றும் எல்லாம் நாதன் நாமமாகிய ஐந்தெழுத்தின் மயமே என்றும் உயிரினங்கள் அனைத்தும் இன்புற்று வாழ்தல் ஆகியவை இம்முதல் பாடல் பொருட்பொதிவு, இதன் விளக்கமாக சேக்கிழார் பெருமானின் நான்கு பாடல்கள் அமைந்துள்ளன. மிகுதிப் பாடல்கள் சிவபிரானுடைய பெருமை, புகழ், அவை தொடர்பான புராண வரலாறுகளைக் கூறிநிற்கின்றன. இறுதிப் பாடல் திருக்கடைக் காப்பாக அமைந்துள்ளது.

ஒழிபியல் சைவசித்தாந்தத் தத்துவங்களை விளக்கும் ஓர் சிறு பகுதியாகவுள்ளது. இன்னும் வைணவம், சாக்தம், வேதாந்தம் போன்ற புறச் சமயக் கோட்பாடுகளை விளங்க வைக்கின்றது.

திருப்பாசுரத்தின் 5 ஆவது பாடல் மிகச் சிறப்பானது. "திருமாலொடு நான்முகனுந் தேடித்தேடொணாத் தேவனை" எம்முள்ளே தேடிக் காண்பதற்கு "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் னெங்கள் சோதி" என்ற பாடலால் இப்பேருண்மை சிறப்புற எடுத்தாளப்பட்டுள்ளது.

*"வெறியார் பொழிற்சண்பையர் வேந்தர் மெய்ப்பாசுரத்தைக்*
*குறியேறிய எல்லை அறிந்து கும்பிட்டேன் அல்லேன்*
*சிறியேன் அறிவுக்கு அவர்தம் திருப்பாதம் தந்த*
*நெறியே சிறிது யான் அறிநீர்மை குறிப்பிட்டேன் அன்பால்"*

*பரசமய கோளரியைப் பாலறாவாயனைப் பூம்பழனஞ்சூழ்ந்த*
*சிர புரத்துத் திருஞானசம்பந்தப்பெருமானைத் தேசம் எல்லாம்*
*குரவையிடத்தமிழ் வேதம் விரித்தருளும் கவுணியர் தம் குல தீபத்தை*
*விரவினமை ஆளுடைவென்றிமளவிளம் களிற்றை விரும்பி வாழ்வாம்.*

***17. 12. 2000 அன்று மாமன்றத்தில் நிகழ்ந்த 'திருப்பாசுரம்' நூல் வெளியீட்டின்போது திரு. இ. நமசிவாயம் (தலைவர், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை) அவர்களால் வழங்கப்பட்ட கருத்துரை.***

## தெய்வ பக்தி

எதிர்பார்க்க முடியாத பயன், உலகத்தார் கண்டு வியக்கும் வண்ணமாக, ஒருவனுக்குக் கைகூட வேண்டுமானால், அதற்கு தெய்வ பக்தியே உபாயம். தெய்வபக்தி உண்மையானால், பரோபகாரம் அங்கே இருக்கும். பரோபகாரம் இல்லாத இடத்தில் தெய்வ பக்தி வேஷமாக இருக்குமே தவிர, உண்மையாக இராது. உண்மையான தெய்வ பக்தி இருந்தால் மனோதைரியம் உண்டாகும். மனோ தைரியம் இருந்தால் உண்மையான தெய்வபக்தி உண்டாகும். மனோ தைரியத்தினால் ஒருவன் இந்த ஜென்மத்திலேயே தேவநிலை பெறுவான். பொதுக் காரியங்களிலும், ராஜ்ய விஷயங்களிலும் ஈடுபடுவோருக்குத் தெய்வ பக்தியும், ஒழுக்கமும் மிகவும் அவசியம்.

– பாரதியார்

# வைதிக நெறி

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

திருவளர்ந்தோங்கிய பரதகண்டத்திலே, தொன்று தொட்டு வழங்கி வருகின்ற சமயநெறி, வைதிகநெறியாகும். வைதிகம் வேதசம்பந்தம் ஆதலின், வேத நூல் வழிநின்றோர் வைதிகரெனப்படுவார். இவரையே ஆஸ்திகரெனவும்கூறுவர். வேதம் என்பன இருக்கு, யசுர், சாமம், அதர்மம் என்னும் நான்குமாம். இவற்றின் வேறாய நூல்களை வேதமென வழங்குவது உபசாரமாத்திரையேயாம். வேதப் பொருளைத் தமிழிற் கூறும் நூல்களை உத்தரவேதம், தமிழ் வேதமென ஆன்றோர் அடையடுத்துக்கூறிய வழக்கினம் நோக்குங்கால், பூருவ வேதமாகிய வடமொழி வேதமே முதநூலென்பது நன்கு பெறப்படுகின்றது. இம்முதனூல் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களைத் தருவனவாகிய கருமானுஷ்டானங்களைக் கூறும்கருமங்காண்ட மெனவும், மோக்ஷமாகிய வீடு பேற்றினைத்தரும் ஞானானு ஷ்டானங்களைக் கூறும் ஞான காண்டமெனவும் அமைந்த இரு காண்டங்களாகி இம்மை மறுமைப் பயனனைத்தினையும் ஒருங்கே தரும் மாண்பினையுடையது.

## வேதாங்கம்

இம்முதனூற்பொருளை ஆராய்வதற்கு இன்றியமையாதன வாகிய கருவி நூல்கள் ஆறு உள. இவற்றை வேதங்கமென்ப. வேதத்தின் உச்சாரண லக்ஷணத்தை உணர்த்துகின்ற சிக்ஷை, பதலக்ஷணத்தை விரித்துக் கூறும் வியாகரணம், வேதத்தின் பதங்களுக்கு விவரணங்கூறுகின்ற நிருத்தம், இலக்கினம், திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதிக கருமங்களுக்குக் காலம் அறிவிக்கும் சோதிடம், வைதிக கருமங்களைப் பிரயோகிக்கும் முறைமையைச் கற்பிக்கும் கல்பம், வேதத்தில் கூறப்படும் உத்தை முதலிய சந்தோபேதங்களுக்கு அக்ஷரசங்கியை கற்பிக்கும் சந்தோவிசிதி ஆகிய ஆறும் வேதாங்கமெனப்படுவன.

## ஆகமம்

ஆகமம் என்பது ஆத்த வாக்கியம். ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அதியான்மகம், அதிமார்க்கம், மந்திரம் என ஐவகைப்படுமென்ப. இவ் ஐவகைப் பொருளும் வேதத்தினுள்ளுங் காணப்படுவனவாதலின், வேதமும் ஆகமமும் ஒத்த பொருளினவேயாம். ஆகமம் என்னும் பொதுமொழி ஆத்தவாக்கியம் அனைத்தினையுங் குறிக்குமாயினும் மந்திர நூற் பொருளை விசேடித்துக்கூறும் சிவாகம், சாத்தாகமம் ஆகிய இரண்டினையுமே ஆகமமெனச் சிறப்பித்துக் கூறுதல் வழக்காமென்பது. காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அரிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிக்கவாசம், சுவாயம்புவம் ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞாநம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்னும் இருபத்தெட்டுஞ் சிவாகமங்களாம். சாத்தாகமங்கள் எண்ணிறந்த பலவாம். ஆகமங்களனைத்தும் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் எனத் தனித்தனி நான்கு பாதங்களையுடையன. இந்நான்கு பாதங்களுங் கருதிய பொருள் வீடுபேறு. வேதங்கருதிய பொருள் முன்னர்க் காட்டியவாறு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும். ஆதலினாலே, வேதம் பொது நூலெனப்பட்டது. அனைத்துப் பொருளையுங் கூறும் நூல், பொது நூல்; ஒரே ஒரு பொருளைத் தனித்துக் கூறும் நூல் சிறப்பு நூல். அதர்வவேதத்துக்குரிய உபநிடதங்களாகிய அதர்வசிகை, அதர்வசிரசு, அத்யாத்துமம், அன்னபூர்ணம், அமிர்தநாதம், அமர்தவிந்து, அவ்யக்தம், கிருஷ்ணம், கௌளம், க்ஷுரிகம், கணபதி, காத்தியாணம், காலாக்கினி, ருத்திரம், குண்டிகம், திரிபுரதகனியம், தக்ஷிணாமூர்த்தி, தேவித்வயம், தியானவிந்து, நாதவிந்து, நாரதீயம், நாராயணம், நாரசிங்கதபனீயம், பாசுபதம், பிரஹ்பபைங்பளம், பைப்பலாதம், வகுவரீசம், விருகஜாவலம், பஸ்மம், முக்திகம், ரகஸ்யம், ராமதபனி, வஜ்ரபஞ்சரம், வாராகம், வாசுதேவம், சரஸ்வதி ரகஸ்யம், சுதரிசனம் என்றித் தொடக்கத்து உபநிடதங்கள் கூறும் பொருளே மந்திரநூற்பொருளாக விரிந்து நின்றதாலின், "வேதசிவாகமங்களுக்குப் பேதம் காண்கின்றிலம்: வேதமேசிவாகமம்," என்று கூறிய நீலகண்ட சிவாசாரியார் வாக்கு நிலைபெறுகின்றது.

## புராணம்

வேதத்துட்பொருளை விளக்குகின்ற பழங்கதைகள் மேற்றொடர்ந்து வருவனவாய், உயர்தனிப்பொருளை எளிதிலுணர்த்தும் நீர்மையவாய் விளங்கும் புராணங்கள் பதினெட்டு உள. அவைதாம் மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பதுமம், வைணவம், பாகவதம், பிரமம், சைவம், இலிங்கம், பௌடியம், நாரதீயம், காரூடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம் என்பன. அவையுமன்றி, நாரசிங்கம், சற்குமாரம், நாரதீயம், சிவதன்மம், துருவாசம், நந்திக்கேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாமபேசம், பராசரம், பிரமாண்டம் என்னும் பதினெட்டு உபபுராணங்களும் உள. புராணங்கள் ஐவகை இலக்கணங்களையுடையனவென அறிஞர் கூறுவர். அவைபாவன, சர்க்கம் (உலகத்தோற்றம்), உபசர்க்கம் (உலகவொடுக்கம்), மந்வந்தரம் (காலவெல்லை வரையறை), வமிசம் (அரசர் வரன்முறை), வமிசாநுசரிதம் (வரன்முறையையொட்டிய கதைகள்) என்பன. இவ்விலக்கணங்களையுடையனவாய்ப் பிற்காலத்திற்பிறந்த நூல்களும் புராணங்களேயாம்.

## இதிகாசம்

காவற்கடவுளாகிய இறைவன் ஸ்ரீ ராமசந்திரனாய் அவதரித்து இராவணாதியரை வென்று உலகத்தில் தருமத்தை நிலை நாட்டிய வரலாற்றினைக் கூறும் இராமாயணம் என்னும் தெய்வநூலும், ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்துத் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலஞ் செய்த மாண்பினைக் கூறும் மகாபாரதம் என்னும் தெய்வநூலும் இதிகாசமெனப் போற்றப்படுவன. மகாபாரதத்தினுள்ளே கிருஷ்ணார்ச்சன சம்வாதரூபமாய் விளங்குகின்ற கீதாசாஸ்திரம் வேதப் பொருளனைத்தையுந் தொகுத்துக் கூறும் மாண்பினது.

## வேறுமுள கலைகள்

உடலுக்குற்ற பிணிகளைப் போக்குதற்குரிய வழிவகைகளைக் கூறும் ஆயுர் வேதமும், இசை மரபுகூறும் காந்தர்வ வேதமும், வில் வித்தையுரைக்கும் தநுர்வேதமும்,

அரசியல் மரபு பொருள் செயல்வகை என்னுமிவற்றைக் கூறும் அர்த்த வேதமுமாக உபவேதங்கள் நான்கு உள. இவையும் பதினெண் ஸ்மிருதி, அறுபத்து நான்கு கலைக்கியானம் என்றின்ன பிறவும் வேறுமுள கலைகள் எனப்பட்டன.

### அத்துவித துவித மார்க்கம்

'இங்ஙனம் பரந்து விரிந்து நூல்களனைத்தினாலுங் கூறப்படுகின்ற முடிந்த பொருள் எதுவோ?' என்னின், மோக்ஷாநுபவம் என்பது. இவ்வநுபவம் உரை மனம் இறந்து நின்ற நிலையில் தாதலின், இத்தகையதென நூல்களாற் கூறவொண்ணாதது. 'பின்னர் நூல்களாற் கூறப்படுவதெதுவோ?' எனின், அவ்வனுபவத்தினை அடைவதற்கு அப்பியசிக்க வேண்டிய மார்க்கம் என்பது. இம்மார்க்கங்கள் பல திறப்படுவன. ஆயினும், இவை அனைத்தும் அத்துவித மார்க்கம், துவிதமார்க்கம் என இரண்டாயடங்குவன. துவிதம் என்பது அன்புக்குரியாளையும் அன்பு செய்யுந் தன்னையும் இருவராகக் காணும் நிலை. அத்துவிதம் என்பது தானேயவள், அவளே தானென்று உணரும் அபேத உணர்ச்சி நிலை.

### துவிதேம அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞானம்

துவித நிலையினின்று பேரன்பு பூண்டார்க்கன்றி, அத்துவித நிலை வந்தெய்தப் பெறாதாதலின், "துவிதமே அத்துவிதஞானத்தை உண்டு பண்ணும் ஞானமாகும்" என்று கூறப்பட்டது. இங்ஙனம் அத்துவிதஞானத்துக்கு வாயிலாக விதந்து கூறப்பட்ட துவித ஞானமானது அன்பின் வயத்ததாதலானும், அன்பு உள்ளத்துணர்வாலனுபவிப்பதன்றி உரையினாற் கூறவொண்ணாததாதலானும், துவித நிலையை, "ஓதரிய துவிதம்" என்றார். அஞ்ஞான நிலையிலிருப்போன் பேதவுணர்ச்சியினாலே பொருளைப் பலவாகக் காண்பான். ஞானநிலையிற் செல்லாநின்ற பெரியானோவெனின், உள்ளத்தூறிய அன்பின் முதிர்ச்சியினாலே பிரபஞ்சம் அனைத்தினையும் மறந்து, தன்னையும் தலைவனையுங்கண்டு நிற்பான். இந்நிலையில் நிற்போனுக்குப் பிரபஞ்சம் இல்பொருளாகின்றது. உண்டுடுத்துக் களியாடும் மாக்களுக்குப் பிரபஞ்சம் உண்மைப்பொருளாயினாகுக. தன்னையுந் தலைவனையுமன்றிப் பிறிதொன்றனையுமறியா அன்பனுக்குப் பிரபஞ்சம் இன்மைப் பொருளேயாம். இந்நிலையானது இரு பொருளேயன்றிப் பிற பொருளறியா நிலையாமாகலின், இதனைத்துவிதமெனல் பொருந்தும். எஞ்சிநின்ற மனமும் அற்றுப்போகத் தன்னையும் மறந்து தலைவனை மாத்திரம் உணராதுணர்ந்து நின்ற நிலை அத்துவித நிலை என்ப. அங்ஙனமாதலின், துவிதவாயிலானன்றி மோக்ஷாநுபவத்தையடைதல் கூடாதென்னும் துவித வாதிகள் கூற்று அத்துவித வாதிகளுக்குக் சம்மதமானதே என்பது பெறப்பட்டது.

### ஊகம் அநுபவ வசனம்

உண்மையையறிந்து நிச்சயித்தற்கு மூன்று வாயில்கள் உண்டு. அவைதாம் சுருதி, யுத்தி, அநுபவம் எனப்படுவன. இவற்றுள் அநுபவம் எனப்படுவது மெய், வாய்,கண், மூக்கு, செவி, மனம் என்னும் ஆறு வாயிலானும் நேரே கண்டறியப்படுவது. அங்ஙனம் நேரே கண்டறிந்த உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு, நியாய நூல், தருக்க நூல் என்னும் கருவிகளாற் செயற்கைப்படுத்தி முடிவு செய்த உண்மை யுத்தி எனப்படுவது. இறைவனால் நேரே கண்டறிந்த உண்மைகளும் வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முனிவர்களால் வெளியிடப்படும் உண்மைகளும் சுருதி எனப்படுவன.

### உபயவாதிகள் சம்மதம்

துவித ஞானமே அத்துவித ஞானத்துக்கு வாயிலாக நிற்பதெனும் மேலான உண்மை, மேலே காட்டிய மூன்று பிரமாணங்களாலும் பெறப்படுவது. அஃதன்றியும், இவ்வுண்மை துவிதவாதிகள், அத்துவிதவாதிகள் ஆகிய இரு சாராருக்கும் ஒருப்பாடானது. விசிஷ்டாத்வைதம் ஏனைய இரண்டினுக்கும் இடை நிகர்த்ததாய் நின்றதாதலின், அதனைத் தனித்துக் கூறாதுவிட்டார்.

### சரியையாதிகள் போதும்

ஞானத்தையடைவதற்குச் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று படிகள் உள. இப்படிகளை முறையே அநுஷ்டிக்க, ஞானம் தானே வந்து எய்துமாதலின், தவப்பெருஞ்செல்வராகிய தாயுமான சுவாமிகள், "எனக்கினிச் சரியையாதிகள் போதும்," என மொழிந்தார்: 'நான்கு பாதங்களும் அரும்பு ,மலர், காய், கனியை ஒத்தன' என மற்றோரிடத்துங் கூறினார். முதனின்ற மூன்று பாதங்களும் தலைவனைத் தனக்குப் புறம்பாக நினைத்துத் தொண்டு, பூஜை, பாவனை, தியானம் என்னும் இவற்றைச் செய்தற்குரிய வாதலால், இவை துவித மார்க்கமாயின.

### உன்னை நான் என்று பாவிக்கின் அத்துவித மார்க்கமுறலாம்.

'ஆன்மா சார்ந்ததன் வண்ணமாவது' எனத்துவிதவாதிகள் கூறுவார்கள். இதனை அநுபவத்தில் தூலமாகக் கண்டறிதல் கூடும். நாடகத்தில் ஸ்திரீவேடமிட்டு நடிப்பவனோர் ஆண்மகன். நாடக அரங்கத்துக்குப் புறம்பேயும் ஸ்திரீகளைப் போல நடத்தல் வசனித்தல் செய்வதையும், ராஜவேஷமிட்டு நடிப்போனது நடையில் ஓர் உயர்வு காணப்படுவதையும் நேரில் நிச்சயித்தல் கூடும். இறைவனுடைய அருட்குணங்களைச் சதா சிந்தை செய்துகொண்டிருப்பவனிடத்தே அவ்வருட்குணங்கள் தோன்றுவதுமியல்பே. உடலுக்கும் உயிருக்கும் ஏற்பட்ட தொடர்பினை நிகர்த்தது, உயிருக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு. ஆதலினால், இறைவனை "உயிரினுக்குயிர்" என்றார். அங்ஙனமாகலின், இறைவனை உயிருக்குயிராகப் பாவித்துச் சிந்தையில் வைத்துத் தியானிக்குமிடத்து, அபேத உணர்ச்சியாகிய அத்துவித ஞானம் வந்தெய்தும். இறைவன், "ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள் செய்வான்". ஆதலினாலே அவனை ஏதுவாகப் பாவித்திடினும் அதனாலெய்திய 'குறை' இல்லை, என்பது பெறப்பட்டது அனைத்துயிர்களும் எம் மிறைவனிடத்திருந்து தோன்றியவாதலின் இறைவனை "எந்தை" என்றார். இச் செய்யுளினால் வேறுபடு சமயங்களால் உணர்த்தப்படும் உண்மைப் பொருள் ஒன்றே என்பதனையும் அவ்வுண்மைப் பொருளை அடையும் மார்க்கம் இதுவென்பதனையும் தாயுமான சுவாமிகள் தெளிவாக விளக்கியருளினார்.

*நன்றி : சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் – தொகுதி 1*

*(மார்ச் மாதம் 29ம் திகதி முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் ஜெனன தினம்)*



# திருஞானசம்பந்தர் வரலாறு


கே. சத்தியசேகரா
*மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயம்*
*பொத்துவில்*


### பிறப்பு விபரங்கள்

| | | |
|---|---|---|
| நாடு | – | சோழநாடு |
| ஊர் | – | சீர்காழி |
| குலம் | – | வைதீகப் பிராமணர் |
| தாய் | – | பகவதியார் |
| தந்தை | – | சிவபாத விருதையார் |
| பிறந்த நாள் | – | திருவாதிரை – ஆதிரை |
| வாழ்ந்த காலம் | – | கி. பி. 640 – 656 |

### திருஞானசம்பந்தரது பெயர்களும் அவற்றுக்கான காரணங்களும்.

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆளுடைய பிள்ளை | – | பிள்ளையார் அழுகுரல் கேட்டு இறைவனும் இறைவியும் ஞானப்பாலூட்டி பிள்ளையை ஆட்கொண்டமையாள். |
| (ஆ) | சிவஞானசம்பந்தர் | – | உமையூட்டிய ஞானப்பாலை உண்டு சிவஞானத்துடன் கலந்தமையால். |
| (இ) | கவுணியர்க்கோன் | – | சிறந்த கவுணிய கோத்திரத்தின் வழி தோன்றி சிறந்து விளங்கியமையால். |
| (ஈ) | தெருக்கலை ஞானக்கன்று | – | தெளிவான சிவஞான பேற்றினை குழந்தைப் பருவத்தில் பெற்றமையால். |
| (உ) | சிவஞானக்கன்று | – | சிவனுக்கு மைந்தன் என்றமையால். |
| (ஊ) | தமிழ் விகரர் | – | மிகுந்த தமிழ்ப் புலமையுடைய மையால். |
| (எ) | ஞானத்தலைவர் | – | ஞானத்திரு நிறைந்தவராக விளங்கிதொண்டு ஆற்றியமையால். |
| (ஏ) | சிறிய பெரும் தகையர் | – | குழந்தைப் பருவத்தில் பேரறிவு டையவராக விளங்கியமையால். |
| (ஐ) | வைதீகமாமணி | – | வைதீக மாண்பினை மலரச் செய்தமையால். |
| (ஒ) | புகலியர்க்கோன் | – | 'புகலி' எனும் ஊரில் பிறந்தருளியமையால். |
| (ஓ) | பரசமய கோளரி | – | சமண,பௌத்த மதத்தவர்களை வென்று சிங்கம் போல் வீறுநடை போட்டமையால். |

### சம்பந்தரின் திருநூல்கள் பற்றிய விபரங்கள்

(அ) தேவாரத் திருப்பதிகங்கள்
(ஆ) தேவாரங்களின் முழுத்தொகை – 16000
(இ) தற்போதுள்ள பதிகங்களின் தொகை – 384
(ஈ) முதற்பாடிய பதிகம் – "தோடுடைய செவியன்...."
(உ) கடைசியில் பாடிய பதிகம் – "காதலாகி கசிந்து....."

### திருமுறையின் உள்ளடக்கம்

| *திருமுறைகள்* | - | *பதிகங்களின் தொகை* |
|---|---|---|
| 1ம் திருமறை | – | 136 |
| 2ம் திருமறை | – | 122 |
| 3ம் திருமறை | – | 126 |

### சமகாலத்து நாயன்மார்கள்

திருநாவுக்கரசர், அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், நெடுமாறன், குலச்சிறையர், மங்கையற்கரசி, குங்கிலியக்கலயர், திருநீலகண்ட யாழ்பாணர், திருநீல நக்கர்

### திருமுறை போற்றும் சிவத்தலங்கள்

பன்னிரு திருமுறைகள் உலகின் பல பகுதிகளிலும் உள்ள சிவத்தலங்களைப் போற்றுகின்றன. கயிலைமலை, சந்திர தீபம் (திபெத்) நேபாளப் பசுபதீச்சுரம், மேரு, மந்தாரம், இந்திர நீலம், ஹேமக்கூடம், வாரனாசி (காசி) குருக்ஷேத்திரம் (ஹரியானா), விராடபுரம், காம்பீலி, ருத்திரகோடி, குவைப்பதி (குவைத்), மக்கீச்சுரம் (மக்கா), மத்தீச்சுரம் (மதினா), அயனீச்சுரம் (அயர்லாந்து), அகத்தீச்சுரம் (ஆஸ்திரேலியா), சோமீச்சுரம் (குஜராத்), நாகளேச்சுரம் (நாகலாந்து), உச்சேனை மாகாளம் (உஜ்ஜயினி), சித்தச்சுரம் (ஒரிஸ்ஸா), விந்தியமலை (ஓங்காரேசுவரம் அமலேசுவரம்), கொண்டீச்சுரம் (கோவா), திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்–ஆந்திரம்), நந்தீச்சுரம் ( கர்நாடகம்), அச்சைக்களம் (கேரளம்), நாகேச்சுரம் (மகாராட்டியம்), கந்தமாதனம் (திருச்செந்தூருக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்து கடலில் மூழ்கிப்போன தலம்), மகேந்திரமலை (இலங்கைக்கும் அப்பால் இருந்து கடலில் மூழ்கிப்போன தலம்), திருக்கேதீச்சுரம் (இலங்கை) போன்ற உலகமெங்கும் உள்ள சிவத்தலங்கள் திருமுறைகளில் போற்றப்படுகின்றன.

(நன்றி: ஞானபூமி)

### சம்பந்தர் தேவாரமும் அவை பாடப்பட்ட பதியும் சந்தர்ப்பங்களும்

| | | |
|---|---|---|
| தேவாரம் | – | "தோடுடைய செவியன்...." |
| பதி | – | சீர்காழி தோணியப்பர் திருத்தலம் |
| சந்தர்ப்பம் | – | சிவனும் உமையும் கொடுத்த ஞானப்பாலை உண்ட பின் பால் கொடுத்தது யாரென அவரது தந்தை அச்சுறுத்திய போது... |
| தேவாரம் | – | "மடையில் வாளை...." |
| பதி | – | திருக்கோலக்கா |

சந்தர்ப்பம் – திருக்கோலக்கா திருப்பதியில்இறைவனை பிள்ளை அவர்கள் கைத்தட்டி புகழ்ந்து பாடியமை.

தேவாரம் – "எந்தையீசன் எம்பெருமான்...."

பதி – திருத்வரத்துறை

சந்தர்ப்பம் – திருவ்ரத்துறை இறைவன் கொடுத்த முத்துக்குடை, முத்துப் பந்தர், பொற்றாளம் ஆகியவற்றை மாறன் பாடியில் அடியார்கள் மூலம் பெற்று அடியார் அரவொலியுடன் திருவரத்துறை தலத்தை அடைந்த போது இறைவனை துதி செய்து பாடிய பாடல்.

தேவாரம் – "மாதர் மடப்பிடியும்........."

பதி – திருத்தருமபுரம்

சந்தர்ப்பம் – திருப்பதிக இசை அளவுபடாத அரிய தன்மையுடையது என்பதனை யாவரும் அறியதிருப்பதினம் பாட வேண்டும் என பாணர் சம்பந்தரைக் கேட்ட போது பாடப்பட்டது.

தேவாரம் – "துணிவளர்த் திங்கள்......"

பதி – திருப்பாச்சிலாச்சிரமம்

சந்தர்ப்பம் – கொல்லி மழவன் எனும் அரசனின் மகள் முயலகனீ நோயினால் வருந்துவதைக் கண்டு அதனை அகற்றும் பொருட்டு இறைவனை வேண்டிப் பாடியமை.

தேவாரம் – "அவ்வினைக் கிவ்வினை........."

பதி – திருக்கொடி மாடச் செங்குன்று

சந்தர்ப்பம் – அடியார்களும் பிறரும் குளிர்ச் சுரத்தால் வாடுவதை நீக்கும் பொருட்டு இறைவனை வேண்டிப் பாடியது.

தேவாரம் – "இடரினும் தளரினும்........"

பதி – திருவாவடுதுறை

சந்தர்ப்பம் – யாகம் செய்யப்பொருள் வேண்டுமென சம்பந்தரை சிவபாதவிருதையார் கேட்ட போது சம்பந்தர் இறைவனிடம் பொருள் வேண்டிப் பாடியமை.

தேவாரம் – "சடையாயெனுமால்................."

பதி – திருமருகல்

சந்தர்ப்பம் – கன்னி ஒருத்தியுடன் வழிப்பயணம் செய்த வணிகனை அரவு தீண்டி இறந்த போது கன்னியின் துயரைப் போக்க இறைவனை வேண்டிப் பாடியமை.

தேவாரம் – "வாசிதீரவே காசு நல்குவீர்................"

பதி – திருவீழிமிழலை

சந்தர்ப்பம் – மாரிவளம் குன்றி நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட போது பசியால் வாடிய அடியார்களுக்கு இறைவன் மூலம் படிக்காசு பெற்று அமுதளித்து வந்த போது தம்காசு வட்டம் பெற்று மாற்றப்படுவதனை அறிந்து மனம் சேர்ந்தது வட்டம் பெறாக் காசுவேண்டிப் பாடியமை.

தேவாரம் – "சதுரம் மறை.........."

பதி – திருமறைக்காடு

சந்தர்ப்பம் – நாவுக்கரசர் திறக்கப்பாடிய திருக்கோயிற் கதவை சம்பந்தர் அடைக்கப் பாடிய போது.

தேவாரம் – "செய்யனே திருவாலவாய்......."

பதி – திருவாலவாய்

சந்தர்ப்பம் – சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு சமணர்கள் தீயிட்ட போது அதனை அணைக்கப் பாடியமை.

### திருஞான சம்பந்தரின் அற்புதங்கள்

(அ) சிறு வயதில் ஞானப்பால் உண்டமை, தேவாரம் பாடியமை.

(ஆ) பொற்றளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை,முத்துச் சின்னம், உலாவாக்கிளியும், படிக்காசும் பெற்றமை.

(இ) திருமறைக் காட்டில் அப்பர் பதிகம் பாடிய திறந்த திருக்கோயிற் கதவை அடைக்கப் பாடியமை.

(ஈ) பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியமை.

(உ) பாண்டிய மன்னனுடைய வெப்பு நோயை நீக்கியமை.

(ஊ) வைகையாற்றில் தேவாரத் திருவேட்டை இட்டு எதிரேறச் செய்தமை. (புனல் வாதம்)

(எ) சமணர்களுடன் வாதிட்டு தேவாரத் திருவேட்டை தீயில் இட்டு எரியாது எடுத்தமை (அனல் வாதம்)

(ஏ) ஆண்பனைகளை பெண் பனைகளாக்கியமை

(ஐ) பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தமை

(ஒ) பாம்பு தீண்டி இறந்த பூம்பாவை எனும் பெண்ணின் எலும்பை குடத்தில் இட்டு வைத்த நிலையில் உயிர்ப்பித்தமை.

(ஓ) திருஞானசம்பந்தர் திருமணத்திற்கு வந்த அனைவரையும் சோதியிற் புக வைத்து சாயுச்சிய முத்தியளித்தமை.

மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும்போது, அதை உறுதி அல்லது தைரியம் என்னும் சாதனத்தால் பிடித்துஎப்பொழுதும் பிரச்சினைகளைச் சந்திக்க நம்பிக்கையுடன் உறுதியாய் நில்லுங்கள். தடைகளை வென்று காரியங்களைச் செய்மு முடித்தால்தான் நீங்கள் வெற்றி பெற்றவராவீர்கள். (எட்வின் மார்க்கம்)

பொறாமை உடைவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறு போல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லை. (திருவள்ளுவர்)

செல்வம் பெருகியுள்ள காலத்தில் ஒருவனுக்குப் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து சுருங்கும் வறுமையுள்ள காலத்தில் பணியாத உயர்வு வேண்டும். (திருவள்ளுவர்)

ஒருவன் தன் மனதோடு பொருந்த உண்மை பேசுவானானால், அவன் தவத்தோடு தானமும் ஒருங்கே செய்வாரைவிடச் சிறந்தவன் (திருவள்ளுவர்)

அரிய சாதனைகள் செய்யப்படுவது வலிமையினால் அல்ல; விடாமுயற்சியினால்தான். (ஒவிட்)

மனதில் தீயவாசனைகள் இருக்கும் வரையில் தூயபக்தி உண்டாவதில்லை. (ஸ்ரீ ராமகிருஷ்ணர்)



# MAHA SIVARATHIRI - THE HOLY NIGHT OF GOD SIVA

**M. K. SELLARAJAH** - *J.P. U. M*

*(PRESIDENT - THIRUKONESWARAM TEMPLE - TRINCOMALE)*

The "Maha Sivarathri" (the holy night of the great God Siva or Iswara) is an important annual lunar festival of the Saivite Hidus which coincides with the newmoon in February. This particular darkest night of the month is dedicated to God Siva whose divine blessings are supposed to extol on those devotees who make offerings and benefaction to the god during the night in the form of "Pooja" anticipating material gain in this world and celestial bliss in the life to come. "Lord Siva" is the third godhead of the Hindu Triad (Thirumoorthi) the other two as the Creator, the Preserver and the Destroyer of the universe and the cosmic forces. However, as Mahadeva, God Siva is acclaimed by the Saivites as an incarnation of Maha Brahama the reputed Creator.

## PARABLE

The parable of the Maha Sivarathiri is woven into the fabric of Hindu mythology. It says that one day a hunter, promissing to bring his wife a good catch of flesh, went into the wilderness to hunt expecting a good return. As the response was poor, he kept on hunting the whole day wishing to return home before dusk with whatever flesh had managed to collect. Unknowingly, the time passed and as veil of darkness began to cover the wilderness, he made his homeward journey with the little flesh he had with him.

As he could not get out of the wilderness in time, and apprehensive of the danger from wildbeasts, he thought to spend the night in the jungle and go home the following morning. So he climbed a nearby proliferous tree, kept the flesh on one of the branches, and he himself sat on another branch, wishing to spend the night on the tree. As hours passed, he felt sleepy but he did not sleep the fearing he might fall down. However he began to doze and in that dull stupefied state of drowsiness he began to make himself more comfortable by making stationary movements.

As the hunter did so, the branch to shake a few leaves fell to ground. The tree happened to be a "beli" or wood apple (Aogle Marmelos) tree, a favourite of the god. The leaves had accidentally fallen upon a sacred "LINGAM" of the god that had been placed there by some devout hunters, with a view to propitiating the god in times of calamity or danger. The hunter at top of the tree, was completely unaware that such a thing was happening.

God Siva, having come to know that someone was performing a pooja in the name of the god, surveyed the terrestrial sphere with his divine eve and saw the man seated on the branch of the wood-apple tree. Wishing to do him good, the god made a divine decree that the man, after his death should be brought to "Kailas" ( The celestial abode of the god.)

After a few years, the hunter died, having accumulated the mortal sin of taking life and was, at once, born in hell to be punished for his sins. The hunter was produced before the Yamaraja (lord of the underworld) and was sentenced to undergo the bloody ordeal in the "Raurava" hell. In the meantime, God Siva saw unfortunate plight of the hunter and forthwith commanded that the man be released from hell and sent to "Kailas".

## LINGAM

This similitude explains the importance of "MAHA SIVARATHIRI" and how a pooja conducted in the name of God Siva, on the particular night, is capable of washing away sins already committed during the course of earthly existence. All Saivite Hindus believe in the divine attributes of God Siva culminating in "Lingam" worship: "Lingam" is the "Shakthi" (power) of the god whose manifold manifestations are highly acclaimed by the votary.

God Siva is known by many other names as well. Viz, Rudra, Maheswara, Shankara, Mahakala, Nataraja, Trilochana, Neelakanda, Pasupathi, Ugradeva, Vishvanatha, Neelagriva, Mahendra, Jagadrom, Kalanjara, Gangadhara, Mahayogi, etc.

The workship of the "Siva Lingam" by Saivite Hindus is done with great faith and devotion. The three principal "Kovils" (Hindu temples or devales) dedicated to the god in Sri Lanka are the Munneswaram kovil in Chilaw, the Koneswaram Kovil in Trincomalee and the Thiruketheswaram kovil in the North, Mannar. The Siva Devale No. 2 (Vanvan Madhavi Iswaran Kovil) in Polonnaruwa stands testimony to the prevalence of Hinduism during the Polonnaruwa period (1088 - 1231).

The worship of the phallus used in fertility rituals was in vogue among the ancient Greeks, the people of the Asia Minor, among the Saivite Hindus, and many others, in various parts of the world, believed in its procrative potential. Specially young couples who have failed to bring forth children by them seek the help of this very divine power to fulfill their expectations.

The divine vehicle of the God Siva is a white bull and accoriding to the Vogue Purana it is an off spring born of Rishi Kasyapa to woman Surabhi. Accordingly all cattle is held with reverence by the Hindus and cutting beef is taboo to them.

There is a belief that during the "Iswara Vinsathiya" (the 20 year period attributed to God Siva) beef cutting brings the wrath of the god resulting in untold misery to the consumers and the salughters at large. The sacred bull is known as "Nandhi".

The votaries of God Siva have a profound faith in the divinity and consider that the festival of the "Maha Sivarathiri" should be conducted to appease the god in such manner so that they could invoke the blessings of god to achieve their mundane Objectives.

# மெய்யறிவு

கடவுள் இருக்கின்றாரா? என்பது பற்றிப் பலருக்கு ஐயபாடு இருந்தால், அவர் எங்கே இருக்கின்றார் என்பதிலும் ஐயம். அவர் என்ன வடிவில் இருக்கின்றார் என்பதிலும் ஐயம்.

சில பொருள்களைக் கண்ணால் காண முடியாது. காண முடியாமையால் அப்பொருள் இல்லை என்று கூறுவது அறிவுடையமையாகாது. மலரின் மணம் இருக்கின்றது. அந்த மணத்தைக் கண்ணினால் காண முடியாதல்லவா? ஒருவன் "இம்மலரில் மணம் இருக்கின்றதா? என்று நான் முப்பது ஆண்டுகளாகக் கண்ணால் உற்றுப் பார்த்தேன்; மேலும் பூதக்கண்ணாடி வைத்தும் பார்த்தேன். வாசனை இருந்தால் என் கண்ணுக்கு தெரியாதா? ஆகவே இம்மலரில் வாசனை இல்லை" என்று கூறி முடிவுகட்டினான். அப்படி முடிவு கட்டிய மகா புருஷனாகிய அறிவு நிறைந்த மேதாவிக்கு மூக்கில் சதை வளர்ந்திருந்தது. காற்று வாய் வழியாக வந்து போய்க் கொண்டிருந்தது. அவன் மலரின் மணத்தைக் கண்ணாலன்றி வேறு எதனால் அறிய தலைப்படுவான்?

மலரின் மணம் இல்லை என்று அவன் கூறியதை, அவனைப் போலவே மூக்கில் சதை வளர்த்தவர்கள் ஊருக்கு மூன்று, நான்கு பேர்கள் ஒன்று கூடி, 'சரி' என்று ஏக மனதாக ஒப்புக் கொண்டு தீர்மானம் செய்தார்கள். இந்த தீர்மானத்தை நல்ல மூக்குள்ள ஒருவன் ஒப்புக் கொள்ளுவானா? என்பதைச் சிந்தியுங்கள்.

மலரின் மனத்தை நாசியினால் அறிதல் வேண்டும். ஒரு செய்யுளில் பொதிந்து கிடக்கும் கருத்தை அறிவினால் அறிதல் வேண்டும். கடவுளை மெய்யறிவினால் அறிதல் வேண்டும். மெய்யறிவு என்பது நூல்களைப் படிப்பதனால் வரும் கலையறிவு அன்று.

நூலறிவால் வாலறிவானாகிய ஆண்டவனை அறிய முடியாது. மெய்யறிவு என்பது அனுபவத்தில் விளைவது. சுட்டியறிகின்ற உலக அறிவு முழுவதும் அற்றுப்போன இடத்திலே அனுபவ அறிவு தலைப்படும். அந்த அளவில் அறிவுக்கறிவான இறைவனுடைய அருட்காட்சி தோன்றும். இதனை அனுபவ ஞானியாகிய அருணகிரிநாத சுவாமிகள் 'கந்தரனு பூதி' யில் இனிமையாகவும், அழகாகவும் கூறுகின்றனர்.

*"அறிவொன் றறநின்றறிவார் அறிவில்*
*பிறிவொன் றறநின்ற பிரானலோயோ*
*சேறிவொன் றறவந் திருளே சிதைய*
*வெறிவேன் றவரோடுறும்வே லவனே"*

*- கந்துரனு பூதி*

*"அறிவா லறிந்துனிருதா ளிறைஞ்சும்*
*அடியா ரிடைஞ்சல் களைவோனே"*

*- திருப்புகழ்*

-திருமுருக கிருபானந்த வாரியார்

# "மயூரமங்கலம்"

## மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக மலர் - 2000



9. 11. 2000 இல் நடந்த மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகத்தையொட்டி 2001 ஜனவரி 5ம் திகதி அன்று 'மயூரமங்கலம்' கும்பாபிஷேகமலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஸ்ரீ பத்திரகாளி அம்மனின் திருவுருவத்துடன் கூடிய அட்டையுடன் கருத்துச் செறிந்த விடயங்கள் நிறைந்த பொக்கிஷமாக இம்மலர் வெளியிடப் பட்டுள்ளது. ஆசியுரைகள் முதற்பாகமாகவும் மயூரபதி அம்பாளின் மாண்புகள் இரண்டாம் பாகமாகவும் சாக்தம் எனும் தலைப்பில் சக்தி பற்றிய முழு விபரங்களும் மூன்றாம் பாகமாகவும் பாரதத்திலும் இந் நாட்டிலும் அம்மன் ஆலயங்களைப் பற்றிய விபரத் தொகுப்பு நான்காவது பாகமாகவுமாக நான்கு பாகங்களாக இம்மலர் தொகுத்து வெளியிடப் பட்டிருக்கிறது.

சாக்தம் பற்றி விளக்கம் தந்து இந்து சமயத்தில் சக்தி வழிபாடு பற்றி எடுத்துக் கூறிவிட்டு சக்தியின் மகத்துவத்தின் பெருமையைப் பல கட்டுரைகள் மூலம் இம்மலர் எடுத்தியம்புகிறது. இக் கட்டுரைகளில் ஈழத்து ஈஸ்வரங்களில் இறைவியின் வடிவங்கள் எனும் படைப்பு இந்நாட்டின் இந்து சமய வரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயமாக அமைகின்றது. அன்னையைப் பலவடிவங்களில் காணுவதை சிறப்பான முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

சக்தி விரதங்கள் பற்றிய விளக்கங்கள் இம்மலரின் மகிமையை மேலும் சிறப்படையச் செய்திருக்கின்றது.

இலங்கையில் இருக்கும் சக்தி தலங்கள் பலவற்றைப் பற்றி மாவட்ட ரீதியாகக் குறிப்புகள் தரப்பட்டுள்ளதுடன் தமிழ் நாட்டில் பிரபல்யமான சக்தி தலங்களான காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, நெல்லை காந்தி மதி, அம்பகரத்தூர் பத்ரகாளியம்மாள், கன்னியாகுமரி பகவதி, கோட்டை மாரியம்மன், கோவை கோணியம்மன், சமயபுரம் மாரியம்மன், சென்னை காளிகாம்பாள், திருக்கடவூர் அபிராமி, மாங்காடு காமாட்சி அம்மன் பற்றிய கட்டுரைகளுடன் வேறு பல தமிழக அம்மன் கோயில்கள் பற்றிய விபரங்களும் மயூர மங்கலத்தின் மதிப்பை மேலும் உயர்த்தி இருக்கின்றன.

சக்தி தோத்திரங்களின் தொகுப்பு இம் மலரின் இன்னும் ஒரு சிறப்பு அம்சம்.

மயூரபதி தேவஸ்தான அறங்காவலர் பொன் வல்லிபுரம் ஆலயத்திருப்பணியுடன் பல சமூகப் பணிகளையும் இணைத்து தொண்டாற்றும் பெருமைக்குரியர். அவர் இந்நாட்டின் இந்து சமய வரலாற்றில் இம் மலரினை வெளியிட்டு ஒரு புதிய அத்தியாயம் சமைத்திருக்கிறார்.

இம்மலரில் ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஆழமான விடயங்களுடன் அழகான சித்திரங்கள் சேர்ந்திருப்பது இன்னும் ஒரு சிறப்பு.

வித்துவான் வசந்தா வைத்தியநாதன் ச. ஆ.பாலேந்திரன், கம்பவாரிதி இ. ஜெயராஜ், க. இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன் ஆகியோர் அடங்கிய மலர்க்குழு தன் கடமையைச் செவ்வனே செய்திருக்கிறது என்றால் மிகையாகாது.

மயூர மங்கலம் இந்நாட்டின் இந்து மக்கள் ஒவ்வொருவரின் இல்லத்திலும் இந்து நிறுவனங்களினதும் பாடசாலைகளினதும் நூல்நிலையங்களிலும் இருக்க வேண்டிய இன்றியமையாத அறிவுப்பொக்கிஷம். இந்த இந்துக்களஞ்சியத்தை இளம் தலைமுறையினருக்கு அறிமுகம் செய்து அவர்களும் அருள்மிகு பலன் பெற பெரியவர்கள் வழிவகுக்க வேண்டும்.

-கந்தையா நீலகண்டன்-



# வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்வோம்

லெட்சுமன் விக்னேஸ்வரன்
*ஆண்டு 13 (வர்த்தகப் பிரிவு),*
*சரஸ்வதி தேசிய கல்லூரி, பதுளை.*

மக்கள் சிறப்பாக வாழ வேண்டும் என்பது வள்ளுவரின் மிகப்பெரிய ஆசை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாண்டி நாட்டு மதுரையில் வாழ்ந்தவர் இவர்.

தனக்காக மட்டுமல்லாது பிறருக்காகவும் வாழ்வதில் தான் வாழ்வின் இன்பமே இருக்கிறது என்கிறார் இவர். எனவே இவர் மக்கள் வாழ்வு பற்றிக் குறளில் குறிப்பிட்டுள்ள விடயங்களைச் சற்றுப் பார்ப்போம்.

### எது மக்கள் வாழ்வு

ஒருவரை ஒருவர் துன்புறுத்தி வாழ்வது மிருக வாழ்வு, தன்னலத்தால் உயரப்பறப்பது பறவை வாழ்வு, தீமை செய்தவருக்குத் தீமை செய்வது பாம்பு வாழ்வு, தீமை செய்யாதவருக்குத் தீமை செய்வது பேய் வாழ்வு, தீமை செய்தவரை மன்னிப்பது மட்டுமல்ல அவர்களுக்கு நன்மை செய்து வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறளில் கூறியுள்ளார்.

### வாழ்வுக்குப் பத்து உடமைகள்

உடலுக்கு அணியும் உடைமைகளைப் போல உள்ளத்திற்கு அணியும் உடைமைகளைக் குறள் கூறுகிறது. அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறயுடைமை, பண்புடைமை என்பனாகும்.

### குறள் இடும் கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடிக்காதே! களவை நினையாதே! காமங் கொள்ளாதே! கொலையை நினையாதே! சூதை நாடாதே! புறங் கூறாதே! பொறாமைப்படாதே! பேராசை கொள்ளாதே!
என நம் வாழ்வுக்குக் கட்டளை இடுகிறார்.

### வெறுத்து வாழ்

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்ற நான்கையும் வெறுத்தே வாழ வேண்டும். பொறாமை, பேராசை, கோபம், கடுஞ் சொற்கள் ஆகிய நான்கும் நம் வாழ்வை நாசமாக்கும் என்பது எவ்வளவு உண்மை.

### நட்பு

நட்பு வாழ்விற்குத் தேவை. நட்பில்லா வாழ்வு சூனியமாகிவிடும். ஆகவே நட்பைக் கைகொள்ள அதை ஆராய்ந்து கொள், தீய நட்புக் கொள்ளாதே, கூடா நட்புக் கொள்ளாதே, சிற்றினம் சேராதே, பெரியோரை வெறுக்காதே, தெரிந்தெடுத்த நட்பை எப்போதும் கைவிடாதே என்று குறள் கூறுகிறது.

### கற்றபடி நிற்றல்

படிக்க வேண்டியதை மட்டும் படி, அதையும் பிழையறப் படி, மனதில் கசடறப் படி, கற்றிடா விடின் கேள், கேட்டவற்றைச் சிந்தித்துப்பார், அதன்படி நட, உன் வாழ்வு வளம் பெறும் என்கிறார்.

### உள்ளத்தை உயர்த்தி வாழ்

உன் உள்ளம் உயரமாக இருக்கட்டும். சிறியன சிந்தியாதே, பெரியதை மட்டுமே எண்ணு. அதையும் அழுத்தமாக எண்ணு. உயர மலர் உயர்வது போல உன் உள்ளம் உயர நீ உயர்வாய்.

### நல்வாழ்விற்கு ஏற்றது 'நா' நலம்

அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், சொன்னபடி நடத்தல், சொல்லியபடி இருத்தல், இனியவை கூறுதல், எவரையும் திட்டாதிருத்தல். இவையே நாவை நலம் படுத்துவனவாகும்.

### யார் பெரியவர்

பணத்தால், படிப்பால், அந்தஸ்தால் உயர்ந்தவர் பெரியர் இல்லை. மலையளவு பேசுவதை விட கடுகளவு செய்பவரே பெரியவர் என்று குறள் கூறுகிறது.

### தோற்றத்தில் மயங்காதே

கோணலாக, கறுப்பாக இருக்கிறது. நாரும் நரம்புமாக இருக்கிறது என வீணையை வெறுக்காதே. இன்பத்தை இழந்து விடுவாய். அழகாக, சிறப்பாக, நேராக, ஒழுங்காக இருக்கிறது என அம்பை நெஞ்சில் வைத்து விடாதே. உன்னைக் கொன்று விடும். எனவே தோற்றத்தைக் கண்டு மயங்காமல் ஆராய்ந்து செயற்படு.

### மனத்திடம்

ஒருவன் நல்லதைச் செய்ய நண்பர், பணம், சுற்றம், அரசாங்கம் இவை எதுவும் அவனுக்கு உண்மையான துணையல்ல, அவனது மன உறுதியே உண்மையாய் வேண்டிய ஒன்றாகும் என்கிறார்.

### மேன்மையடைய வழி

ஒருவன் பொன், மணி, பட்டம், பதவி, ஆடை அணிகளால் மேன்மையடைய முடியாது. ஒழுக்கம் மட்டுமே ஒருவனை உயர்த்தும். ஒழுக்கத்தில் வாழ்ந்தவன் தவறி ஏதும் தவறு செய்து விட்டால் உலகம் அதை நம்பாது. அதே வேளை ஒழுக்கம் இல்லாதவன் நல்லவனாகத் திருந்தினாலும் உலகம் நம்பாது. பிறர் செய்யும் தவறைக்கூட அவன் செய்ததாகவே கருதும்.

### யார் மேலானவர்

திருவள்ளுவர் ஒரு தராசைத் தூக்கிக் காட்டுகிறார். அதில் ஒன்று மேலேயும் மற்றது கீழேயும் இருக்கிறது. எது மேலே இருக்கிறது? ஒன்று மில்லாத வெறுந்தட்டு. அதேபோல உலகில் அறிவில்லாத சிலர் மேலேயும் சில அறிவுள்ளவர் கீழேயும் இருப்பார்கள் என்கிறார்.

### மனிதன்

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன். அவன் தெய்வமாகவும் கருதப்படுவான். அவ்வாறு வாழ முடியாதவர்கள் இருப்பதைவிட இறப்பதே மேல். விருந்தினருக்குக் கொடுக்காமல் உண்பவன், நண்பரும் வேதனைப்பட வாழ்பவன், மானத்தை இழந்தவன், பொய் பேசி, புறங்கூறி வாழ்பவன், இரப்போருக்குக் கொடுக்க முடியவில்லை என்போரைச் சாகச் சொல்கிறார். இறப்பதும், பிறப்பதும், உறங்குவதையும் விழிப்பதையும் போன்றது என்கிறார். ஆகவே நாமும் குறளைப் படித்து பயன்படுத்தி வாழ்வில் சிறப்புற வாழ்வோமாக.

*"குறளைப் படித்து மகிழ்வதை விட*
*பயன்படுத்தி மகிழ்வதே சிறப்பு".*

# இந்து சமய அழகியலும் பரத நாட்டியமும்

செல்வி வா. சாந்தினி
நடனத் துறை (2ம் வருடம்)
இராமநாதன் நுண்கலை பீடம்
யாழ்ப்பாணம்

இந்துக்களின் அழகியல் கோட்பாடுகளை ஆடல் வழியாக விளங்கிக் கொள்வதற்குரிய குறியீடாகப் பரத நாட்டியம் விளங்குகின்றது எனலாம். அழகியல் என்பது "அறிவு புகமுடியாத இடத்திற்கு மன உணர்வினை இட்டுச் செல்லும்" என வெல்சன் என்ற விஞ்ஞானி கூறியுள்ளார். அழகியல் இடம், காலம், பொருள் என்பவற்றிற்கு ஏற்ப மாறுபடும் தன்மையுடையது. இதனால் அழகியல் என்றால் என்ன எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது. அரிஸ்ரோட்டில் என்ற விஞ்ஞானி "ஒழுங்கு முறை, ஒத்த அளவு, திட்டவட்டமான தன்மை" ஆகியவை இருக்கும் இடத்திலே அழகியல் பிரசவிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தன்மைகள் இந்து சமயத்தில் மிகத் தெளிவாகக் காணப்படுவதால் இந்து சமயத்தில் பல சிறப்பான அழகியல் அம்சங்கள் காணப்படுகின்றன. கலைகள் சமயச் சார்பும்,தெய்வீக அம்சங்களும் கொண்டவை. ஏனெனில் "சிவ அனுபவம் எங்கே பிறக்கின்றதோ அங்கே கலைக ளெல்லாம் முகிழ்கின்றன", என்ற நம் முன்னோர்களின் கருத்தில் கலைகளிற்குப் புனிதமான தெய்வீகத் தோற்றம் கொடுத்தமையினை அறிய முடிகின்றது. இத்துடன் கலைகள் தோன்றிய இடங்களாகவும் ஆலயங்கள் விளங்குகின்றன. இந்து சமய நுண்கலைகள் எல்லாம் மறைபொருள் கொண்டவை. இவை வீடு பேற்றை நல்கும் சாதனங்களாகத் தொன்று தொட்டு இருந்து வருகின்றன. இவ்வாறு இந்து சமயமும் கலைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து விளங்குவதால் இந்து சமய அழகியல் அம்சங்கள் கலைகள் ஊடாகப் புலப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக பரத நாட்டியத்தினைக் கூறலாம்.

பரதம் இறைவனிடம் இருந்து பிறந்தது. பாவம், ராகம், தாளம் ஆகிய மூன்று அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது. அத்துடன் அபிநயம், நடிப்பு, வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, நிருத்தம் முதலிய பல அம்சங்களைக் கொண்ட கூட்டுக் கலையாகவும் விளங்குகின்றது. எனவே இந்து சமய அழகியல் அம்சங்களான சிற்பம், ஓவியம், கட்டிடம், இசை போன்ற கலைகள், அவதாரம், தத்துவங்கள், இந்து மத இலக்கியக் கருத்துக்கள், சிவதாண்டவங்கள், பக்தி, அட்டாங்க யோகம் ஆகியன பரத நாட்டியத்தினூடு புலப்படுகின்ற தன்மையை நோக்குவோம்.

இந்து சமய தத்துவங்கள் முத்திக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. "ஆன்மா இவ்வுலகில் பிறந்தது முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது ஆன்மாவின் இலட்சியமாக அமைகின்றது. இம் முத்தியின்பத்தை அடைவற்குப் பல வகையான வழி முறைகளினை இச்சமயம் கூறியுள்ளது. பரத நாட்டியத்தின் முத்தி பற்றிய உள்ளார்ந்த கருப்பொருள் அறம், பொருள், இன்பம் என்பவற்றைக் கடைபிடித்து மனித ஆன்மா இறுதியிலடையும் இடத்தை அடைவதாகும். திருமுறைகள், பிரபந்தங்கள், தத்துவங்கள் என்பவற்றினூடு புலப்படும் கருத்துக்கள் பரத நாட்டியத்தில் பதம், கீர்த்தனை, மங்களம் போன்ற உருப்படிகள் ஊடாகப் புலப்படுவதினை நாம் "வெள்ளிடை மலை" யாகக் காணலாம்.

இந்து சமய அழகியல் அம்சங்கள் சிற்பம், ஓவியம், கட்டிடம், இசை போன்ற கலை வடிவங்களாகவும் விளங்குகின்றன. ஆலயங்களில் சிற்ப, ஓவியங்களில் நாட்டிய அபிநயங்களின் தோற்றத்தினைக் காணலாம். இத்துடன் இறைவனுடைய பல நிலைகளையும் பற்பல சிற்பங்களாகச் செதுக்கி ஆலயக் கோபுரங்களிலும் ஸ்தூபிகளிலும் உள்ளமையை நாம் காணலாம்.

அடுத்து இந்து சமய அழகியலில் எடுத்துக் காட்டப்படும் அவதாரக் கோட்பாட்டினை நோக்குவோம். அவதாரம் என்பது கீழ் இறங்குதல் எனப் பொருள்படும். அதாவது இறைவன் ஆன்மாக்கள் மேல் வைத்த அன்பின் காரணமாகத் தனது நிலையில் நின்று ஒருபடி கீழ் இறங்குதலாகும். பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா "தர்மம் ஒழிந்து அதர்மம் மேலோங்கும் வேளையில் நான் அவதரிப்பேன்" எனக் கூறியிருக்கிறார். இந்து சமயக் கடவுள்களின் அவதாரம் பற்றிப் புராண, இதிகாசங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கிருஷ்ண அவதாரங்களான மச்ச, கூர்ம, வராக, வாமன, நரசிம்ம, பலராம, இராம, பரசுராம, கிருஷ்ண, கல்கி போன்றவற்றில் ஒவ்வொரு விதமான அழகியல் அம்சங்களைக் காணலாம். இவ் அவதாரங்கள் பரத நாட்டியத்தில் சில உருப்படிகளிலும், நாட்டிய நாடகங்களிலும் முத்திரைகள், அபிநயங்களின் மூலம் வெளிக் கொணரப்படுகின்றன.

சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இயக்கம் பல்லவ, சோழ காலங்களிலே வளர்ச்சியடைந்தது. இக் காலத்தில் பக்தியை வளர்ப்பதற்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் அரும்பாடுபட்டு உழைத்தனர். நாயன்மார்கள் இறைவனைப் போற்றி வணங்கும்போது கூத்துடன் இறைவனை இணைத்தே பாடியுள்ளனர். காரைக்கால் அம்மையார் "அறவா! நீ ஆடும் போது உன்னடியின்.........." என்றும், மணிவாசகப் பெருமான் "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து....."என்றும், "தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி....." என அப்பர் சுவாமிகளும், "வலம் வந்து மடவார்கள் நடமாட முழவதிர ......." என சம்பந்தப் பெருமானும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கவையாகும். நாயன்மார்கள் இறைவனைப் பாடியும் ஆடியும் வாழ்த்தி வழிபட்டனர். பல்லவ சோழ காலத்திலே ஒவ்வொரு ஆலயங்களிற்குமென நடன மாதர்கள் நியமிக்கப்பட்டிருந்தமையைக் கொண்டு பக்தியை வளர்ப்பதற்கு பரத நாட்டியம் மாபெரும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

உலக இயக்கத்திற்குக் காரணமாக இறைவனது நடராஜ வடிவம் விளங்குகிறது. பரத நாட்டியத்தில் இவரை ஆடற்கரசன், கூத்தப்பிரான் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளார். நூற்றெட்டு சிவதாண்டவங்களிலே சிறப்புப் பெற்றது ஐந்தொழில்களையும் உள்ளடக்கிய ஆனந்த தாண்டவமாடும் நடராஜ வடிவமாகும். நடராஜ வடிவத்தின் ஒவ்வொரு அங்க ஆடை ஆபரணங்களும் ஒவ்வொரு தத்துவங்களை உடையதாகவே விளங்குகின்றன. நாட்டிய உருப்படிகளில் கூடுதலாகச் சிவன் பற்றிய பாடல்களிற்குத் தாண்டவங்ளே செய்யப்படுகின்றன. சிவன் பாத்திரம் வரும் நாட்டிய, நாடகங்களில் சிவதாண்டவ நிலைகளை நாம் காணலாம். பதம் என்ற நாட்டிய உருப்படியில் ஜீவாத்மா, பரமாத்மா தத்துவத்தினை நாயகன் நாயகி பாவத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படுவதையும் காணலாம்.

அடுத்து இந்து சமய அழகியல் அம்சங்கள் இந்து மத இலக்கியங்கள் ஊடு வெளிப்படுகின்றன. புராண இதிகாசங்கள், நீதி நூல்கள், திருமுறைகள் என்பன அறக் கருத்துக்கள், ஒழுக்கக் கருத்துக்கள் என்பவற்றை எடுத்துக் கூறுகின்றன. மனக்கட்டுப்பாடு சாதாரண மனிதருக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் நிலையில் யோக அப்பியாசம் மேற்கொள்ளுதல் நன்று. இதற்கு இந்து மதம் அட்டாங்க யோகங்களைப் பரத நாட்டியப் பயிற்சி மூலம் வழங்குகிறது. அப்பியாசம், வைராக்கியம் முதலிய எண்ணக் கருக்கள் ஆடலின் ஆக்கங்களிலே எடுத்தாளப்பட்டன. இதனால் நடனத்தின் உருவத்திலும் உள்ளத்திலும் யோகங்கள் ஆழ்ந்த சுவடுகளைப் பதித்துள்ளன. இதனால் இந்து மரபில் வளர்ச்சியுற்ற யோக மரபுகள் பரத நாட்டியத்தின் தொல்சீர் வடிவமைப்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

எனவே தொகுத்து நோக்குமிடத்து இந்து சமய அழகியல் அம்சங்களான தத்துவங்கள், கலைகள், அவதாரம், சிவதாண்டவம், சமய இலக்கியங்கள் என்பன வேறுபட்ட விதத்தில் பரத நாட்டியத்தினூடு வெளிப்படுகின்றன என்றே கூறவேண்டும். ஏனெனில் "அழகியல் உணர்வும் தெய்வீக உணர்வும்" வேறு பிரிக்க முடியாதவை. அத்துடன் இந்துக்களின் சமயமரபும், ஆடல் மரபும் பல்வேறு பண்புகளை உள்ளடக்கிய மரபுகளின் மரபாக வளர்ச்சி கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. சுருங்கக் கூறின் இந்து சமய அழகியல் கோட்பாடுகளை ஆடல் வழியாக விளங்கிக் கொள்வதற்குரிய ஆக்கமாக பரத நாட்டியம் விளங்குகிறது எனலாம். இதனாலே நாட்டியத்தினை ஐந்தாம் வேதமாகப் போற்றுகின்றனர்.

**DAY AND LOVE**

START THE DAY WITH LOVE
FILL THE DAY WITH LOVE
SPEND THE DAY WITH LOVE
END THE DAY WITH LOVE
THIS IS THE WAY TO GOD

**நாளும் அன்பும்**

இந்நாளை அன்புடன் தொடங்கு
இந்நாளை அன்பினால் நிரப்பு
இந்நாளை அன்பினில் கழித்திடு
இந்நாளை அன்புடன் நிறைவு செய்
இதுவே கடவுளை அடையும் வழி

# சிவராத்திரி மகிமை

சிவாலயங்களில் ஈஸ்வரனுடைய சந்நிதானத்தின் கர்ப்பக்கிருஹ விமானங்களுக்குப் பின்புறம் மேற்கு நோக்கி 'லிங்கோற்பவ மூர்த்தி"யின் பிம்பமிருக்கிறது. லிங்கோற்பவமூர்த்தி என்பது பரமசிவனுடைய அறுபத்துநான்கு மூர்த்தங்களுள் ஒன்று. சிவனுடைய உருவம் மான் மழுவுடன் இருக்கிறது. சிரசும் பாதங்களும் கண்களுக்குப் புலப்படா. கீழே வராகமூர்த்தி காணப்படுவார். மேலே ஹம்ஸ மூர்த்தி காணப்படுவார்.

ஆதியும் அந்தமும் இல்லாத சோதி சொரூபமே இவ்விதம் லிங்கோற்பவ மூர்த்தியாக நள்ளிரவில் விசுவரூபம் எடுத்த நன்னாள் சிவராத்திரி ஆகும். இப்படியான ஒளிப்பிழம்பைக் காணப் பிரமா அன்னப்பட்சியாக ஆகாயமார்க்கத்தில் பறந்தும், மகாவிஷ்ணு வராக மூர்த்தியாகப் பாதாளத்தில் சென்றும் இருவரும் இறைவனின் அடிமுடி காண இயலாமல் தோல்வியுற்றனர். (கல்வியாலும் செல்வத்தாலும் பரம்பொருளை எட்டிப் பிடிக்க இயலாது என்பது கருத்து.)

சகல பிரமாண்டமும் சிவலிங்க சொரூபம். பாதாளம் முதல் ஆகாசமாகப் பிரகாசிக்கின்ற ஸ்படிகலிங்கத்திற்குச் சிவராத்திரிப் புனித நாளில் நான்கு காலமும் அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த லிங்கத்தின் சிரசில் பூரண சந்திரகலை இருக்கிறது. சந்திர கலையினின்றும் அமிர்தம் பெருகுகின்றது. அதனால் பிரம்மானந்தம் உண்டாகிறது. சகல உலகமும் அந்த ஒளிமயமான லிங்க வடிவந்தான். அந்த லிங்கம் அமிருதத்தினால் நனைக்கப்பட்டுக் குளிர்ச்சியடையும்போது உலகம் முழுவதும் குளிர்ச்சி அடைகிறது என்று தியானித்துப் பின்னர் அபிஷேகம் செய்ய வேண்டும்.

நாம் யாரை அதிகமாக நினைக்கிறோமோ அப்போது அவராகவே மாறி விடுவோம். சித்தத்தில் கொஞ்சங் கூடச் சலனமில்லாமல் ஆனந்த மூபியான ஈஸ்வரனைச் சதா நினைத்தால் நாமும் அவ்விதமே ஆகிவிடமுடியும். ஏற்றிய தீபம் காற்றில்லாத போது எப்படி ஆடாமல் அசையாமல் துல்லியமாய்ப் பிரகாசிக்கின்றதோ அதைப் போலவே நம்மனத்தில் சலனமில்லாத போது ஈசுவரனும் பிரகாசிக்கிறான். ஸ்படிகலிங்க மூர்த்தியான சந்திர மௌலீசுவரனை இந்தச் சிவராத்திரிப் புனித காலத்தில் உபவாசமிருந்து, இரவு கண் உறங்காமல் தியானித்து வழிபட்டால் சகல சௌபாக்கியங்களையும் அடைவோம்.

*- காமகோடி சங்கராச்சாரியார்.*

(நன்றி :- சிவதொண்டன் - 1967)

# இதயம் பேசுகிறது

*அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" சஞ்சிகைத் தொடரில், இது பதினெட்டாவது சுடராகவும், மலர்ந்திருக்கும் இந்தப் புதிய ஆண்டின் முதலாவது சுடராகவும் உங்கள் கரங்களில் தவழ்கிறது.*

*"இந்து ஒளி" சஞ்சிகை அண்மைக் காலமாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பெரிதும் விரும்பப்பட்டு வருவதை அறிந்து மாமன்றம் மகிழ்ச்சியடைகிறது. மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் "இந்து ஒளி" சஞ்சிகையில் தொடர்ந்தும் வெளியாகும்.*

*அதே வேளையில் மாணவர்களும் பயனுள்ள விஷயங்களை எழுதி அனுப்பிவைக்கலாம். "இந்து ஒளி" யில் வெளியாகும் விஷயங்களைப் பற்றிய கருத்துக்களையும் வரவேற்கிறோம்.*

*க. பொ. த. சாதாரண, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும், ஏனைய மாணவர்களுக்கும் பயனுள்ள சமய சம்பந்தமான விஷயங்களை ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.*

*"இந்து ஒளி" சஞ்சிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு விடயதானங்கள் செய்து வரும் அனைவருக்கும் மாமன்றம் நன்றி தெரிவிக்கிறது.*

*"இந்து ஒளி" சஞ்சிகையைப் பாராட்டியும், வாழ்த்தியும் கடிதங்கள் எழுதிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் ஒரு சிலரின் கருத்துக்களையும் இங்கு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.*

"இந்து ஒளி" சஞ்சிகையை வாசிப்பதன் மூலம் இந்து சமய விஷயங்களையும் இந்து சமயப் பெரியார்கள் பற்றியும், அவர்கள் வழங்கிய நல்வழிகளையும் அறிந்து கொள்ளுவதுடன், அதன் மூலம் வாழ்க்கையையும் நல்வழிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

"இந்து ஒளி" சிறப்பாக வளரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

-லெ. சர்வேஸ்வரன்,
*பாரதி மகா வித்தியாலயம், பதுளை.*

❖ "இந்து ஒளி" சஞ்சிகையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். இந்து சமயக் கருத்துக்களை மிகவும் சிறப்பான வகையில் வெளிப்படுத்தும் இந்தச் சஞ்சிகை, அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது.

லெ. தட்சணாமூர்த்தி,
*பாரதி மகா வித்தியாலயம், பதுளை.*

❖ "இந்து ஒளி" சஞ்சிகை வாயிலாக இந்து சமயம் சம்பந்தப்பட்ட பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மாணவர்களுக்காக மாணவர் ஒளி என்றதொரு தனிப் பகுதியை ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

-லெ. விக்னேஸ்வரன்
*சரஸ்வதி தேசியப் பாடசாலை, பதுளை.*

❖ மாணவர்களுக்காக மாணவர் ஒளி என்றதொரு தனிப் பகுதியை ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். அது மட்டுமன்றி, சமய சம்பந்தமான பல விடயங்களையும், சமய பண்டிகைளின் சிறப்புக்களையும் அறியத் தருவதில் இந்து ஒளி சஞ்சிகை பிரதான பங்களிப்பு செய்து வருவதை பெரிதும் வரவேற்கிறேன்.

-இ. லக்ஷ்மிகாந்த்
*கொழும்பு – 12.*

❖ கந்த சஷ்டி சிறப்பிதழாக வெளியாகியிருந்த இந்து ஒளி சஞ்சிகையை வாசித்தேன். கந்த சஷ்டி கவசம், கந்த புராணம் மற்றும் கந்த சஷ்டி விரதம் பற்றிய பல தகவல்கள் சஞ்சிகையை அலங்கரித்திருந்தன. தொடர்ந்து இது போன்ற பயனுள்ள அம்சங்களுடன் இந்து ஒளி வெளியாக வேண்டும் என விரும்புகிறேன்.

- யோ. ரஜனீஸ்
*மோதர வீதி, கொழும்பு – 15.*

## எந்நாட்டவர்க்கும் இறைவன்

ஜப்பானில் சந்திகளிலும், சதுக்கங்களிலும் சிவன் கோயில்களை நிறுவி வழிபட்டு வந்துள்ளனர். திபெத், சீனா, பூட்டான், மெக்ஸிகோ, பீனா ஆகிய நாடுகளிலும் சிவ வழிபாடு சிறந்து இருந்தது. போர்னியா நாட்டுக் குகையில் ஈசன் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சுமத்திராவில் பெரிய சிவலிங்கமும், அர்த்தநாரீஸ்வர வடிவமும் கிடைத்துள்ளன. இயங்கும் பொருட்களின் இயக்கத்திற்கும், ஜீவராசிகளின் உயிரோட்டத்திற்கும் காரணமான நடராஜத் திருவுருவம், மலேசியாவில் கிடைத்துள்ளது. சேரம் என்ற ஊரில் நடராஜரும் தங்க லிங்கமும் கிடைத்துள்ளன. ஹரப்பா, மொகஞ்சோதாரா பகுதிகளில் சிறியனவும், பெரியனவுமாக எண்ணற்ற சிவலிங்கங்கள் கிடைத்துள்ளன.

நன்றி : ஞானபூமி



மாமன்றத் தலைமையகத்தில்
நடைபெற்ற
"திருப்பாசுரத்தின் விளக்கம்"
(ஆங்கில நூல்) வெளியீட்டு
வைபவத்தின் நிகழ்வுகள்





மறைந்த மாமன்றத் தலைவர்
திரு. வே. பாலசுப்பிரமணியம்
நினைவுப் பேருரை வைபவத்தில்
வணக்கத்திற்குரிய பற்றிக் ஹரிகன்
அவர்கள் "கதிர்காமத்தின் மகிமை"
என்ற பொருளில் பேருரை
நிகழ்த்துகிறார்.



## இந்தச் சுடரில்..............................


1. பஞ்ச புராணங்கள்

2. மகா சிவராத்திரி விரத மகிமை

5. சிவலிங்க தத்துவம்

7. சிவனுக்குப் பிரியமான இராத்திரி

9. தங்கத் தளிர் ஞாயிறே வருக! வருக!

10. விநாயக வணக்கம்

12. இந்து சமய சமுதாயக் கருத்துக்களைக் கூறுவதில் தர்ம சாஸ்த்திரங்கள் பெறும் முக்கியத்துவம்.

14. பண்பாட்டுச் சுடர்கள்

15. திருமலை பத்திரகாளியம்மா!

16. புதுவருட நாட்காட்டி

18. குப்தர்கால இந்து மறுமலர்ச்சி

20. பாசுரந் தந்த பண்பாளர்

22. வைதிக நெறி

26. Maha Sivarathiri - The Holy Night of God Siva

28. நோக்கு - மயூரமங்கலம் (கும்பாபிஷேக மலர்)

29. வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்வோம்

30. இந்து சமய அழகியலும் பரத நாட்டியமும்

32. இதயம் பேசுகிறது


**அடுத்த சுடர்**

விஷு வருடம்
சித்திரை - ஆனி

### வாழ்த்து

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிறபாம்.


**இந்து ஒளி**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விக்கிரம வருடம் தை – பங்குனி இதழ்
மாசித்திங்கள் 9ம் நாள்
21. 02. 2001.



**ஆசிரிய குழு :**

புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. எம். பவளகாந்தன்
திரு. த. மனோகரன்


| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா | ரூபா | 80.00 |
| வெளிநாட்டு வருடாந்தச் சந்தா | டொலர் | 10.00 |


**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A. C. H. C கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2, இலங்கை.
தொலைபேசி எண் : 434990, தொலைநகல் எண்: 344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில்
தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்
ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

Thai - Pankuni of
ALL CEYLON HINDU CONGRESS
21st February 2001



**EDITORIAL BOARD :**

Pulavar A. Thirunavukarasu
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. M. Pavalakanthan
Mr. D. Manoharan


| | | |
|---|---|---|
| Price | Rs. | 20.00 per copy |
| Annual Supscription | Rs. | 80.00 |
| Foreign Supscription | U. S. $ | 10.00 |
| (Including Postage) | | |


ALL CEYLON HINDU CONGRESS,
A. C. H. C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha,
Colombo - 2, Sri Lanka.
Telephone No : 434990, Fax No : 344720


Next Issue :
**SITHIRAI - AANI**


Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.



PRINTED BY UNIE ARTS (PVT) LTD, COLOMBO 13. SRI LANKA. TEL: 94-1-330195.